Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 13, 2023

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 13, 2023 | ஒளி: 09 கதிர் 105 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி

# “மன அழுத்தத்தில் இருந்தார்”



## மனைவி சாட்சியமளித்ததாக அறிக்கை சமர்ப்பிப்பு

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதியும் ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் அல்லது வேறு எந்த வகையிலும் அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லை எனவும் , அவரது திடீர் வெளிநாடுப் பயணமானது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) டிஜிட்டல் தடயவியல் பிரிவு அரசாங்கத்திடம் சமர்ப்பித்த அறிக்கையின்படி இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 25ஆம் திகதி இந்தியா செல்வதற்கு நீதிபதி விடுப்பு கோரி விண்ணப்பித்தபோது, அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, செப்டம்பர் 24ஆம் திகதி அவர் திடீரென வேறு நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார் என்று அந்த அறிக்கை கூறுகிறது. குறித்த சம்பவத்தின் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட ஏதேனும் குழுக்களின் செல்வாக்கு இருக்கிறதா என்பது தொடர்பில் க்டோபர்

தொடர்ச்சி P2

சிறுமியின் கை துண்டிப்பு விவகாரம்

## மூவரை கைது செய்ய நீதிமன்றில் கோரிக்கை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமி வைசாலியின் கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் மூன்று பேரை உடனடியாக கைது செய்யுமாறு சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் கோரிக்கையை முன்வைத்தனர்.

துண்டிக்கப்பட்ட கை தொடர்பில் மருத்துவப் பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வைத்தியர் நிபுணர் குழு அறிக்கை மன்றுக்கு சமர்பிக்கப்படாத நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய விடுதி வைத்தியர், பெண் தாதி உத்தியோகத்தர்,

தொடர்ச்சி P2



## கல்லூரிக்குள் வெள்ளம் கல்வி நடவடிக்கை பாதிப்பு

எஸ்.சதீஸ்ம

லையகத்தில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக புதன்கிழமை (11) பெய்த கடும் மழையால் கெசல்கமுவ ஓயாவுக்குகு நீரேந்தி செல்லும் கிளை ஆறுகள் பெருக்கெடுத்தன. இதன் காரணமாக பல தாழ்வான பகுதிகள் வெள்ள நீரினால் மூழ்கின.

தொடர்ச்சி P2

## மோடிக்கு எழுதுவதா? இல்லையா? இன்று முடிவு

இந்திய பிரதமர் நரேந்திர மோடியினை சந்தித்து தமிழ் மக்களின் நிலைகள் குறித்து தெளிவுபடுத்தி தீர்க்கமான முடிவொன்றினை எட்டுவதற்கு தமிழ் தேசிய கட்சிகளை சேர்ந்த ஏழு கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றினை அனுப்ப தயாராக உள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



தேராவில் கிராமத்தில்

## 37 குடும்பங்களுக்கு வீடும் இல்லை காணியும் இல்லை

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேராவில் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களில் 37 குடும்பங்களுக்கு வீடும் இல்லை காணியும் இல்லாத நிலை காணப்படுவதாக கிராம அபிவிருத்தி சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## USNS BRUNSWICK வந்துள்ளது

அமெரிக்க கடற்படைக் கப்பல் (USNS) BRUNSWICK கப்பல் கொழும்பு துறைமுகத்தை புதன்கிழமை (11) வந்தடைந்தது. கெப்டன் ஆண்ட்ரூ எச் பெரெட்டி தலைமையில், 24 பணியாளர்கள் வந்துள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் காலத்தில், கப்பலின் பணியாளர்கள் நாட்டிலுள்ள சில சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், USNS BRUNSWICK ஞாயிற்றுக்கிழமை (15) திரும்பவுள்ளது.

## ஆற்றில் அள்ளூண்ட சிறுவன் சடலமாக மீட்பு

நவி



கண்டி, தெல்தோட்டை - லிட்டில்வெளி பகுதியிலுள்ள ஆற்றில் அடித்துச்செல்லப்பட்ட சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## கடலட்டை பிடிப்போருக்கு கடும் கெடுபிடி விதிப்பு


### போராட்டம் வெடிக்குமென பள்ளிமுனை மீனவர்கள் எச்சரிக்கை

றொசேரியன் லெம்பட்

மன்னார் பள்ளிமுனை கடற்கரையிலிருந்து அட்டை பிடிக்க கடலுக்குச் செல்லும் பள்ளிமுனை கிராம மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஷங்ரிலா குண்டுத்தாக்குதல் வீடியோவை நீதிபதிகள் பார்த்தனர்



ஈஸ்டர் ஞாயிறன்று, கொழும்பு ஷங்ரிலா ஹோட்டல், கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை குறிவைத்து மத தீவிரவாதிகள் நடத்திய தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பான பாதுகாப்பு கெமரா காட்சிகள், வழக்கை விசாரிக்கும் மூன்று பேர் கொண்ட மேல்நீதிமன்ற அமர்வு முன் காட்சிப்படுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## யாரை அனுப்பலாம்; வஜிர யோசனை



மனதில் இருக்கும் வைராக்கியம் மற்றும் வெறுப்பை நீக்கியதன் பின்னரே, வாக்குச் சாவடிகளுக்கு வாக்காளர்களை அனுப்பவேண்டும் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, அதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை என்றார்.

வைராக்கியம், குரோதம் மற்றும் பொறாமை ஆகியன இல்லாத வாக்காளர்கள், வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் போதுதான்,

தொடர்ச்சி P2

## நியூசிலாந்து தேர்தலில் தமிழர் போட்டி



நியூசிலாந்து நாட்டில் சனிக்கிழமை (14) பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் நியூசிலாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் பிரதிநிதித்துவபடுத்திய ஆளும் தொழில் கட்சிக்கும் எதிர்க்கட்சியான தேசியக் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகிறது.

தொடர்ச்சி P2

## தொடரும் துயரம்

க. அகரன்



காணாமல் போன தனது மகனைத் தேடிவந்த தந்தையான வவுனியா மகாறம்பைக்குளம் ஸ்ரீ ராமபுரம் பகுதியை சேர்ந்த முத்தையா ஆறுமுகம் (வயது65) சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார்.

இவரது மகனான ஆறுமுகம் சிவகுமார் வவுனியாவில் வைத்து கடந்த 2007 ஆம் ஆண்டு கடத்தப்பட்டிருந்தார். அவரைத்தேடி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில்

தொடர்ச்சி P2

## இருநாட்டு ஒத்துழைப்புக்கு 3 ஒப்பந்தங்கள் கைசாத்து



இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் (IORA) கூட்டத்தில் பங்கேற்க நாட்டிற்கு வருகை தந்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெயசங்கர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (11) இடம்பெற்றது.

இந்திய - இலங்கை உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக்கொள்ளும் வகையிலான 03 ஒப்பந்தங்களும் கைசாத்திடப்பட்டன.

அதேபோல் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டத்தை இணையத்தின் ஊடாக திறந்துவைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## பகிடி வதைகளை தடுக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன

### அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு



கடந்த 3 ஆண்டுகளில் அரசப் பல்கலைக்கழகங்களில் நடந்த பகிடிவதைகளைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து நவம்பர் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “மன அழுத்தத்தில் இருந்தார்”

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உயிரச்சுறுத்தல் காரணமாக நீதிபதி சரவணராஜா பதவியை இராஜினாமா செய்தது தொடர்பில் முழுமையான விசாரணை நடாத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

நீதிபதி சரவணராஜா தனக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமை தொடர்பில் நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் எதையும் பதிவு செய்யவில்லை. மேலும் செப்டெம்பர் 23 ஆம் திகதி தனது இராஜினாமா கடிதத்தை நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்ததுடன் செப்பெடம்பர் 24ஆம் திகதி அவர் வெளிநாட்டிற்கு சென்றார்.

அத்துடன் குறித்த நீதிபதி பிரதிவாதியாக பதிவு செய்யப்பட்ட வழக்கு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்தது.

நீதிபதி சரவணராஜாவின் மனைவி, முல்லைத்தீவு மேலதிக நீதபதி டி. பிரதீபன், முல்லைத்தீவு சிரேஷ்ட அத்தியட்சகர் டி.யூ.பீ. அமரதுங்க, பொலிஸ் தலைமையக பதில் ஆய்வாளர் W.G.H.N.K. திலகரட்ன, நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி கான்ஸ்டபிள் கே.எஸ். பிரேமன், தனிப்பட்ட பாதுகாப்பு கான்ஸ்டபிள் கே. சிவகாந்தன், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள் எம். முதிசன், முல்லைத்தீவு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகிய சமரகோன் மற்றும் சந்தருவன், முல்லைத்தீவு நீதிமன்ற பதிவாளர் பீ. சரவணராஜா, நீதிபதியின் அலுவலக எழுத்தர் (Clerk) பீ. சுசிகன், பிஸ்கல் எஸ். சிவக்குமார் மற்றும் முல்லைத்தீவு நீதிமன்ற உத்தியோகத்தர் ஜே. லின்டன் ராஜா ஆகியோரிடம் சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. இருப்பினும் நீதிபதி சரவணராஜா தனக்கு எதிராக அச்சுறுத்தல்கள் இருப்பதாக ஒருபோதும் குறிப்பிட்டதில்லை எனத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவின் முன்னாள் மாவட்ட நீதிபதி சரவணராஜா 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முல்லைத்தீவு நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அவருக்குத் தேவையான சகல பாதுகாப்பையும் வழங்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த நேரத்திலும் பாதுகாப்பு அல்லது உயிருக்கு ஆபத்தான பிரச்சினை எதுவும் எழுப்பப்படவில்லை. விசாரணையில், நீதிபதி செப்டம்பர் 24-ம் திகதி டுபாய்க்கு சென்றது தெரியவந்துள்ளது.

அதற்காக குருநாகல் விற்பனைப் பிரதிநிதி ஒருவரிடமிருந்து எயார் அரேபியா விமானப் பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அமெரிக்க தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொடுக்கப்பட்ட தொலைபேசி எண் செயல்படவில்லை என்றால் மீண்டும் அழைக்க பயணச்சீட்டு விற்பனை முகவருக்கு கென்ய தொலைபேசி இலக்கம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

கல்முனைப் பகுதியில் இருந்து விமானப் பயணச்சீட்டுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளது. ஷார்ஜா, நைரோபி, புதுடெல்லி வழியாக ஒக்டோபர் 12ம் திகதி இலங்கை திரும்புவதற்கு பயணச்சீட்டு பெறப்பட்டது. விமான நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி, ஷார்ஜாவை அடுத்து நைரோபிக்கு செல்ல நீதிபதி விமான பயணச்சீட்டை பயன்படுத்தவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த தகவல்களின் அடிப்படையில் நீதிபதியின் வெளிநாட்டுப் பயணம் முன் கூட்டியே திட்டமிடப்பட்டது என்பது தெளிவாகின்றது. சேவையிலிருந்து இராஜினாமா செய்த பின்னர் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டைப் பயன்படுத்துவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

முல்லைத்தீவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.யு.பி.அமரதுங்க, கடந்த ஜனவரி மாதம் முதல் தனிப்பட்ட முறையிலும் உத்தியோகபூர்வமாகவும் நீதிபதியுடன் தான் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாகவும், நீதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை இருப்பதாக அவர் தன்னிடம் ஒருபோதும் தெரிவித்ததில்லை எனவும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்திய இரண்டு அதிகாரிகளும், உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்புக்காக 12 மணித்தியாலங்கள் உட்பட தினமும் நான்கு உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் பரிசோதகர் திலகரத்ன வாக்குமூலம் அளித்துள்ளார்.

நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியான பொலிஸ் கான்ஸ்டபிள் பிரேமன், பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்று நீதிபதி ஒருபோதும் கூறவில்லை என்றும், உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி தம்மிடம் கூறவில்லை என்றும் கூறியுள்ளார்.

மாவட்ட நீதிபதி வெளிநாடு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தனது காரை விற்றுவிட்டு செப்டெம்பர் 23ஆம் திகதி வெளிநாடு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றப் பதிவாளரின் வாக்குமூலத்தில், தாம் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் முல்லைத்தீவு நீதிமன்றில் கடமையாற்றி வருவதாகவும், தனக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாக நீதிபதி ஒருபோதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 25 முதல் ஒக்டோபர் 1 வரை வெளிநாட்டு விடுப்புக்கு சரவணராஜா விண்ணப்பித்ததாகவும் ,ஒகஸ்ட் 30 ஆம் திகதி இந்தியாவுக்குச் செல்ல விண்ணப்பம் அனுப்பியதாகவும், வெளிநாட்டு விடுமுறைக்கு ஒப்புதல் அளித்து நீதிச் சேவை ஆணைக்குழு செப்டம்பர் 21 ஆம் திகதி தொலைநகல் அனுப்பியதாகவும் கூறப்பட்டுள்ளது.

மாவட்ட நீதிபதியின் மனைவி, தனது கணவர் நீதிபதி என்ற முறையில் கடுமையான மன அழுத்தத்தில் இருந்ததாகவும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாதுகாப்பு குறைபாடு குறித்து அவர் குறிப்பிட்டுள்ளார் எனவும் தெரிவித்தார். எனினும் சமீபகாலமாக அவ்வாறான பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் தன்னிடம் கூறப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செப்டம்பர் 23 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் தனது கணவர் வெளியேறியதாகவும், அவர் வெளிநாடு செல்வது தனக்குத் தெரியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# 37 குடும்பங்களுக்கு வீடும் இல்லை காணியும் இல்லை

தேராவில் கிராமத்தில் 347 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் பலர் திருமணம் செய்துகுடும்பங்களாக பதிவினை மேற்கொண்டு வந்துள்ளார்கள். இவ்வாறு கைக்குழந்தைகளுடன் வீடும் இல்லாதநிலையில் பெற்றோர்களின் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் சிறு கொட்டகைகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்வாறு காணியும் இல்லாத நிலையில் வீடும் இல்லாத நிலையில் 37 குடும்பங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த குடும்பங்களுக்கான காணிகளையும் வீட்டுத்திட்டங்களையும் அரசாங்கம் வழங்க வேண்டும் என கிராம மட்ட அமைப்புக்கள் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

# மூவரை கைது செய்ய நீதிமன்றில் கோரிக்கை

ஆண் தாதி உத்தியோகத்தர் ஆகிய மூவரை உடனடியாக கைது செய்து வழக்கை முன்னோக்கி கொண்டுச் செல்ல மன்று அனுமதிக்க வேண்டும் என சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

இந்நிலையில், அடுத்த வழக்கில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதாக தெரிவித்த நீதிபதி ஏ.ஆனந்தராஜா வழக்கை நவம்பர் 7ஆம் திகதிக்கு தவணையிட்டார்.

# தொடரும் துயரம்

குறித்த தந்தை கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தருமாறு போராடியிருந்தார். இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் பலர், தங்களுடைய உறவுகளைத் தேடி போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். அவர்களில் பலரும் உறவினர்களை காணாமலே மரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாரை அனுப்பலாம் வஜிர யோசனை

நல்லதொரு நாட்டை கட்டியெழுப்பும் இயலுமை கிடைக்கும் என்றார்.

ரணில் மீது பொறாமை பட்டுக்கொண்டிருக்காது, அவருடைய அறிவை பயன்படுத்த வேண்டும் என்றும் வஜிர அபேவர்தன கேட்டுக்கொண்டார்.

காலியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இலங்கையர் 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின்னர் கடந்த 75 வருடங்களாக தவறு செய்த இனமாகவே இருக்கின்றனர் என்றார். அதனை நிறைவுக்குக் கொண்டுவரும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றார்.

தவறுகளை திருத்தவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிக்கொருதடவை நினைவூட்டுகின்றார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இருநாட்டு ஒத்துழைப்புக்கு 3 ஒப்பந்தங்கள் கைசாத்து

10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டத்தின் நான்காவது அத்தியாயத்தின் கீழ் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 1.026 மில்லியன் ரூபாவை 2.8 மில்லியன் ரூபாயாக அதிகரித்துக்கொள்வதற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் 9 திட்டங்களை விரைவில் நிறைவு செய்வதற்கு அவசியமான மேலதிக ஒதுக்கீடுகளை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளதோடு அதற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

அதன் கீழ் வடக்கு மாகாணத்தின் 27 பாடசாலைகளை மேம்படுத்தல், மன்னார் மற்றும் அநுராதபுரம் வீடமைப்புத் திட்டங்கள், அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் புஸ்ஸலாவை சரஸ்வதி மத்திய கல்லூரியின் அபிவிருத்தி பணிகள், பொலன்னறுவையில் பல்லின - மும்மொழிப் பாடசாலையொன்றை நிர்மாணித்தல், யாழ்ப்பாணத்தில் மழைநீரை சேகரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழான 2889 நிர்மாணிப்புக்கள், தம்புள்ளையில் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கான 5000 மெட்ரிக் டொன் கொள்ளளவுடைய குளிரூட்டி வசதிகள் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு புதிய சத்திரசிகிச்சை பிரிவொன்றை நிறுவுதல் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளன.

அதேபோல் இலங்கையின் தேசிய பாலுற்பத்தியை பலப்படுத்தும் வகையில் இந்தியாவின் குஜராத் கூட்டுறவு பால் விற்பனை சம்மேளனமான (அமுல் குழுமம்) மற்றும் இலங்கையின் காகீல்ஸ் கூட்டு வர்த்தக நிறுவனம், இந்திய தேசிய பாலுற்பத்தி ஊக்குவிப்பு சபை ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ள கூட்டு வேலைத்திட்டத்திற்கான ஒப்பந்தமும் கைசாத்திடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் பலனாக கைசாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இந்நாட்டின் கால்நடை வளர்ப்புத் துறையை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகள் கிடைக்கவுள்ளன. அத்தோடு, முதல் ஐந்து வருடங்களில் பால் உற்பத்தியை 53% வீதத்தினால் அதிகரித்துக்கொள்ளவும் 15 வருடங்களில் இலங்கையை பாலுற்பத்தியில் தன்னிறைவான நாடாக மாற்றும் நோக்கத்துடனும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# கல்லூரிக்குள் வெள்ளம் கல்வி நடவடிக்கை பாதிப்பு

பொகவந்தலாவை, பிரதேசத்தில் பெய்த கடும் மழையின் காரணமாக பொகவந்தலாவ சென் மேரிஸ் தேசிய கல்லூரியில் பல பகுதிகள் வெல்ல நீரில் மூழ்கியுள்ளதோடு வகுப்பறைகளில் நீர் நிரம்பி உள்ளது.

சுமார் 2 மணித்தியாலங்களாக பெய்த கடும் மழை காரணமாக தேயிலை தோட்டங்களுக்கு செல்லும் வீதிகளும் வெள்ள நீரில் மூழ்கின.

பொகவந்தலாவை, சென் மேரிஸ் தேசிய கல்லூரியின் வகுப்பறைகளுக்குள் வெள்ள நீர் உற்புகுந்தமையினால் தரம் 8இல் 4 வகுப்பறைகளும், உயர்தரத்தில் வர்த்தக பிரிவு, விசேட கல்வி பிரிவு, ஆங்கில அழகியற் பிரிவு, தரம் 7ல் 3 வகுப்பறைகளும், தரம் 9இல் ‘பி’ பிரிவு ஆகியவற்றின் கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

“வெள்ளநீர் புகுந்த வகுப்பறைகளை பாடசாலை மாணவர்களால் சுத்தம் செய்ததன் பின்னரே ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன” என்று கல்லூரியின் அதிபர் எ.வேலுசாமி தெரிவித்தார்

# ஷங்ரிலா குண்டுத்தாக்குதல் வீடியோவை நீதிபதிகள் பார்த்தனர்

நீதிமன்ற அறையில் அமைக்கப்பட்டிருந்த திரையில் தொடர்புடைய சிசிடிவி காட்சிகளை காட்சிப்படுத்தி உரிய ஆதாரங்களை பதிவு செய்த நீதிமன்றம், இந்த வழக்கில் சாட்சிகளின் அடையாளத்தை ஊடகங்களுக்கு வெளியிட வேண்டாம் என்று உத்தரவிட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த வழக்கின் சாட்சிகளின் அடையாளத்தை ஊடகங்களுக்கு வெளியிடுவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திருமதி ஹரிபிரியா ஜயசுந்தர விடுத்த கோரிக்கைக்கு அமைய, இந்த நீதிமன்ற அமர்வு மேற்கண்டவாறு தீர்ப்பளித்தது.

மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தோட்டவத்த (தலைவர்) அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மூவரடங்கிய மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

# மோடிக்கு எழுதுவதா?...

கடிதத்தினை உடனடியாக அனுப்புவதா? இல்லையா? என்பது குறித்து இன்று (13) வெள்ளிக்கிழமை நாங்கள் மீளவும் கூடியே தீர்மானம் எடுக்கவுள்ளோம்.

இன்று சில கட்சி தலைவர்கள் வருகைதராமையின் காரணமாக இறுதி முடிவு எட்டப்படவில்லை. 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டிய தார்மீக பொறுப்பு இந்தியாவிற்கு காணப்படுகின்றது.

தற்பொழுது நாட்டின் நிலை குறித்தும்,தமிழ் மக்களது நிலை குறித்தும் 13 இனை அமுல்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் அவருடன் பேச நாம் விருப்பமாக இருக்கின்றோம் என்றார்.

# ஆற்றில் அள்ளுண்ட சிறுவன் சடலமாக மீட்பு

புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்பில் கலந்து கொண்டு மாணவன் புதன்கிழமை (11) வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

புதன்கிழமை (11)திகதி காணாமல் போன குறித்த சிறுவன், வியாழக்கிழமை (12) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

லிட்டில்வெலி தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் சிறுவன், பாடசாலையில் மேலதிக வகுப்பினை முடித்துவிட்டு வீடு திரும்பிய வேளை, லிட்டில்வெலி ஓடையை கடக்கும் போது நீரில் அடித்துச் செல்லப்பட்டார்.

இதனையடுத்து, கிராம மக்கள் இணைந்து தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்த போது காணாமல் போன இடத்திலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பாலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் பேராதனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை கலஹா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பகிடி வதைகளை தடுக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன

சமர்ப்பிக்குமாறு அனைத்து அரசப் பல்கலைக்கழகங்களுக்கும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிரேஷ்ட மாணவர்களால் துன்புறுத்தப்பட்ட வேளையில் தனது தலையில் டயர் தாக்கியதில் ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு வழங்குமாறு கோரி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் பசிந்து ஹர்ஷன சில்வா தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர்களான புவனேக அலுவிஹார, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு பரிசீலிக்கப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கலாநிதி அவந்தி பெரேரா, தான் அனைத்து பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தப் போவதில்லை எனவும், ஏனைய பிரதிவாதிகள் சார்பாக வாதிடுவதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு, களனி மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்ததுடன் அது தொடர்பான அறிக்கைகளை தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் வழங்குமாறும் கோரினர்.

# நியூசிலாந்து...

இந்த இரண்டு கட்சிகளுக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. என்று அந்நாட்டில் வெளியான கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இந்த பொதுத் தேர்தலில் தேசியக் கட்சி தேசிய வேட்பாளர் பட்டியலில் இலங்கையைப் பூர்வீகமாக கொண்ட பொறியியல் ஆலோசகர் செந்தூரன் அருளானந்தம் உள்ளார்.

இங்கிலாந்து, சிங்கப்பூர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் பாரிய கட்டுமாணப் திட்டங்களில் அலோசகராக பணியாற்றி உள்ளார். அத்துடன், நியூசிலாந்தில் பல்வேறு சமூகப் பணிகளிலும் அவர் ஈடுபட்டுள்ளார்.

இவர், யாழ். பரியோவான் (St.John's College) மற்றும் கொழும்பு றோயல் கல்லூரிகளின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடலட்டை பிடிப்போருக்கு கடும் கெடுபிடி விதிப்பு

மூன்று மாதங்களின் பின்னர் தற்போது கடலட்டை பிடிக்கும் பருவகாலம் என்பதால் மீனவர்கள் கடலட்டை பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

படகு ஒன்றில் சுமார் 10 பேர் வரை கடலட்டை பிடிக்க கடந்தகாலங்களில் சென்று வந்தனர். எனினும், படகு ஒன்றில் 8 சிலிண்டர்களுடன் 3 பேர் மாத்திரமே தொழிலுக்குச் செல்ல முடியுமென மன்னார் கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகு ஒன்றில் 3 பேர் மாத்திரமே செல்ல முடியுமென கடற்படை வியாழக்கிழமை (12) அறிவித்தமையினால் மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வு இல்லாது விட்டால் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக பள்ளிமுனை மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

# கொழும்பு சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தனது 200ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி வரும் இச்சந்தர்ப்பத்தில், அதன் பழைய மாணவர் கொழும்பு சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கொழும்பு- பம்பலப்பிட்டி அரச தொடர்மாடி சனசமூக மண்டபத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் நிர்வாகக் குழு தெரிவு இடம்பெறவுள்ளதுடன், கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

எனவே, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

# 584 விவசாயிகளுக்கு ஒரு கோடி நட்டஈடு

■ பு.கஜிந்தன்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2023-2024 பெரும்போகத்தில் வறட்சி, வெள்ளம், காட்டுயானை தாக்கத்திற்குள்ளான விவசாயிகளுக்கு ஒரு கோடியே இருபத்தேழு இலட்சத்து எண்பத்து ஐயாயிரத்து நானூற்றி எழுபத்தி மூன்று ரூபாய் நட்டஈடு கிடைக்கப்பெற்றுள்ளதாக கிளிநொச்சி கமநல காப்புறுதிச்சபையின் உதவிப்பணிப்பாளர் (பதில்) பி.பூரணச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில், வியாழக்கிழமை (12) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார். இவ்விரு காலப்பகுதியில் 71,947 ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

1,215 ஏக்கர் நிலப்பரப்புக்கு 584 விவசாயிகளுக்கு வெள்ளம் ,வறட்சி, காட்டு யானைகளின் தாக்கத்திற்காக நஷ்டஈடாக கிடைக்கப்பெற்றுள்ளது. விவசாய அமைச்சர் கிளிநொச்சிக்கு சனிக்கிழமை (14) வருகை தரவுள்ளார் அப்போது விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் பணி சம்பிரதாயபூர்வமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனைத்தொடர்ந்து அனைத்து விவசாயிகளுக்கும் அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பில் இடப்படும் என தெரிவித்துள்ளார்.

கமநல காப்புறுதி சபையின் இவ்வாறான நன்மைகளை விவசாயிகள் அடைவதற்கு அனைத்து விவசாயிகளும் தங்களின் பயிர்களுக்குக் காப்புறுதி செய்வதுடன், தமது கால்நடைகளுக்கான காப்புறுதிகளையும் மேற்கொள்ள முடியும். விவசாயிகளுக்கான ஓய்வூதிய காப்புறுதியைப் பெருமளவு விவசாயிகள் பயன்படுத்துவதில்லை எனவும் இவை விவசாயிகளின் இறுதி நேரத்தில் பிரயோசன படுத்தும். எனவே விவசாய ஓய்வூதிய காப்புறுதியையும் விவசாயிகள் செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



# தலை மீட்பு



துண்டிக்கப்பட்ட மனித தலை ஒன்று பமுனுகம பழைய அம்பலம கடற்கரையில் மீட்கப்பட்டுள்ளது.

பமுனுகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி இந்த மனித தலை வியாழக்கிழமை (12) மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட தலை, யாருடையதென அடையாளம் காண முடியாத அளவிற்கு சிதைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அத்துடன் தலைக்கு உரிய ஏனைய உடற்பாகங்கள் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

குறித்த தலை தொடர்பில் நீதவான் விசாரணை நடத்தப்படவுள்ளதுடன், பமுனுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உயிரிழந்த புள்ளிச்சுறா கரையொதுங்கியது

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கங்கைவாடி பகுதியில் புள்ளிச்சுறா மீனொன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

குறித்த சுறா மீன் வலையில் சிக்குண்டு உயிரிழந்த நிலையில், செவ்வாய்க்கிழமை (10) கரையொதுங்கியதாக புத்தளம் வனாத்தவில்லு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கரையொதுங்கிய புள்ளிச்சுறா மீன் சுமார் 25 அடி நீளமுடையது எனவும் 2,000 கிலோ கிராம் எடை கொண்டு காணப்படுவதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த புள்ளிச் சுறா மீனைப் பார்வையிடுவதற்காக புத்தளம், கற்பிட்டி, பாலாவி உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வருகைதந்துள்ளனர்.



மத்திய மாகாண பாடசாலைகளில்

# சா/த முன்னோடி பரீட்சை 2 நாட்களுக்கு பிந்தியது

■ எஸ். சதீஸ்

> கல்வி பொது தராதர சாதாரண தர முன்னோடி பரீட்சையை பிற்போடுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

மத்திய மாகாண பாடசாலைகளில் இம்மாதம் 23ஆம் திகதியிலிருந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்வி பொது தராதர சாதாரண தர முன்னோடி பரீட்சையை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நடத்த ஏற்பாடு செய்யுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவிற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ் பாடசாலைகளில் நவராத்திரி விழா சார்ந்த பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும் வகையில், இம்மாதம் 23ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 2ஆம் திகதி வரை நடைபெற மத்திய மாகாண கல்வி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது

இந்த ஏற்பாடானது நவராத்திரி விழா தமிழ் பாடசாலைகளில் இடம்பெறுவதற்கு ஒரு தடையாகவிருக்கும் என்ற விடயத்தினை கல்வி இராஜாங்க அமைச்சர் கவனத்திற்கு மலையக ஆசிரியர் முன்னணி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களால் எழுத்து மூலமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதனால் கல்வி ராஜாங்க அமைச்சர் ஒரு நீண்ட விளக்கக் கடிதத்தினை மத்திய மாகாண ஆளுநர்க்கு அனுப்பி வைத்துள்ளதோடு, கல்வி பொது தராதர சாதாரண தர முன்னோடி பரீட்சையை பிற்போடுமாறு அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தினை அறிந்து கொண்ட மத்திய மாகாண ஆளுநர் உடனடியாக செயற்பட்டு கல்வி பொது தராதர சாதாரண தர முன்னோடி பரீட்சையை எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பித்து நவம்பர் 4ஆம் திகதி முடிவுறும் வண்ணம் சம்மந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கி உள்ளதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மாணவி மீது மோகம்: ஆசிரியர் கைது

தொட்டு வணங்கும் போது முகத்தில் முத்தமிடுவதாகத் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து, குறித்த ஆசிரியர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக திஸ்ஸமஹாராம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலை ஒன்றின் பதினொன்றாம் வருட மாணவிக்கு சிங்கள பாடம் கற்பிக்கும் ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் இடம்பெற்றதாகவும், அப்போது தான் உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் இருந்தபோது, தன்னை பார்ப்பதற்காக இந்த ஆசிரியர் வீட்டுக்கு வந்ததாகவும் மாணவி பொலிஸாரிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

வீட்டுக்கு வந்ததும், நோய்க்கு மருத்துவம் பார்க்கச் செல்லுமாறு கூறிய, தன்னை கட்டி அணைத்துக்கொண்டதாகவும், அப்போது தனக்கு வெட்கமாக இருந்ததுடன், மிகவும் அசௌகரியமாகவும் இருந்ததாக மாணவி கூறியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மருமகனுடன் சைக்கிளில் பயணித்த மாமா மரணம்

■ பு.கஜிந்தன்

வைத்தியசாலைக்குத் தனது மருமகனுடன் சைக்கிளில், பின்னால் அமர்ந்து பயணித்த அவருடைய மாமா, சைக்கிளிருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

வெளிச்சவீடு வீதி, பருத்தித்துறையை சேர்ந்த 52 வயதுடைய பிலிப்பு இராஜசிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவதற்காக மந்திகை வைத்தியசாலைக்கு மருமகனுடன் சைக்கிளில் கடந்த 7ஆம் திகதி செல்லும்போது இடைவழியில் கீழே விழுந்துள்ளார்.

இதன்போது அவரை முச்சக்கரவண்டி மூலம் மந்திகை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளதுடன், அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் எனினும், சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (10) உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான பிரேதப் பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டுள்ளார்.




**தேவை**

சமைப்பதற்கு 22 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட பெண் தேவை. காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை வேலை. தங்கியிருந்து வேலைச் செய்யக்கூடியவர்கள் கவனத்தில் கொள்ளப்படுவார்கள். இல. 55 ஸ்ரீ தர்மாராம வீதி, தெமட்டகொட கொழும்பு-9 அழையுங்கள். 0772614412


# நன்கொடை வழங்கிய செலிங்கோ லைஃப்

செலிங்கோ லைஃப் சமூகத்தின் முயற்சியின் காரணமாக, மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் தற்போது 300 படுக்கைகளுக்கு உயிர்காக்கும் ஆக்ஸிஜனின் தடையற்ற விநியோகம் சென்றடைகிறது.

இலங்கையின் ஆயுள் காப்புறுதி சந்தையின் முன்னணி நிறுவனம், மருத்துவமனையின் மத்திய ஆக்ஸிஜன் செறிவூட்டியை வார்டுகளுடன் இணைக்கும் குழாய் வலையமைப்பை நிர்மாணிப்பதற்காக ரூபா 12.3 மில்லியனை முதலீடு செய்து, சிலிண்டர்களை மீண்டும் நிரப்பி அவற்றை 22 ஏக்கர் வளாகம் முழுவதும் உள்ள வார்டுகளுக்கு கொண்டு செல்லும் சிரமத்தையும், வீணடிக்கப்படும் நேரத்தையும் மற்றும் அதிக செலவை ஏற்படுத்தும் நடைமுறையையும் நீக்கியுள்ளது.

இந்த திட்டத்தின் விளைவாக, மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவு (ICU) மற்றும் பிற வார்டுகள் இப்போது ஆக்ஸிஜனில் தன்னிறைவு பெற்றுள்ளன. இது சிகிச்சையின் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது. அதே நேரத்தில் மருத்துவமனையின் ஆக்ஸிஜன் செறிவூட்டி அதிகபட்ச பயன்பாட்டை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





செலிங்கோ லைஃப் நிறுவனத்தால், 500,000 ரூபாய்க்கு மேல் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த விழாவில் புதிய ஆக்ஸிஜன் விநியோக முறை முறைப்படி மருத்துவமனையில் கையளிக்கப்பட்டது.

விழா ஒன்றில் பேசிய செலிங்கோ லைஃப் தலைவர் ஆர்.ரெங்கநாதன், “எங்கள் நிறுவனம் எப்போதும் தனது வெற்றியை அதன் பங்குதாரர்களுடன் பகிர்ந்து கொள்கிறது. பொது மக்களும் அத்தகைய பங்குதாரர்களில் ஒருவர்.

இலங்கையானது உலகின் மிகச் சிறந்த சுகாதார அமைப்புகளில் ஒன்றாகும், மேலும் எந்தவொரு குடிமகனும் இலவசமாக மருத்துவ சேவையைப் பெற முடியும். இயற்கையாகவே, செலவு தாக்கங்கள் மற்றும் சவால்கள் உள்ளன. பல மருத்துவமனைகளில்

அவர்களுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் இல்லை என்பதை நாங்கள் அறிவோம். செலிங்கோ லைஃப் தனது கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசாங்க சுகாதார அமைப்புக்குப் பல ஆண்டுகளாகப் பல பங்களிப்புகளைச் செய்துள்ளது. மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு செலிங்கோ லைஃப் வழங்கிய தாராளமான பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவித்த வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஜி.எம்.எம். தர்மதாச, ஆபத்தான நிலையிலுள்ள நோயாளர்களுக்கான ‘பொன் நேரத்தில்’ சிகிச்சையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

மீட்டியாகொட - தெல்வத்த பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இடம்பெற்ற பரஸ்பரத் துப்பாக்கி பிரயோகங்கத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதாள உலக குழு உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் வீடொன்றில் மறைந்திருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, விசேட அதிரடிப் படையினர் குறித்த வீட்டைச் சுற்றி வளைத்துள்ளனர்.

இதன்போது, சந்தேகநபர் விசேட அதிரடிப் படையினரை நோக்கி துப்பாக்கி பிரயோகம் நடாத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, விசேட அதிரடிப் படையினர் நடத்திய பதில் துப்பாக்கி பிரயோகத்தில் குறித்த சந்தேகநபர் காயமடைந்துள்ளார்.




காயமடைந்த சந்தேகநபர் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து உயிரிழந்துள்ளார்.

தெற்கில் இடம்பெற்ற பல குற்றங்களுடன், இவர் தொடர்புடைய சந்தேகநபர்களில் இவரும் ஒருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# வடமாகாண தற்போதைய நிலை மகிழ்ச்சியளிக்கிறது

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாகப் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் பென்னி மோர்டான்ட் (Penny Mourdant) தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்பு யாழ்.நகரில் வியாழக்கிழமை (12) இடம்பெற்றுள்ளது. வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் பென்னி மோர்டௌண்டிற்கு ஆளுநர் விளக்கமளித்துள்ளார்.



# பல்டிகளுக்கு பேரச்சமூட்டிய தீர்ப்பும் வரபிரசாதங்களுக்கு விழுந்த ஆப்பும்

மாகாண சபைத் தேர்தல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே 2024ஆம் ஆண்டு நடத்தவேண்டிய தேர்தல்களையும் ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் திரைமறைவில் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டே, அரசாங்கம் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோமென திட்டவட்டமாக அறிவித்துள்ளது. ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுப்பதில் ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பமான நிலை காரணமாகவே இவ்வாறான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர், தற்போதைய பாராளுமன்றத்தை கலைத்து மக்கள் விரும்பும் பாராளுமன்றத்தை அமைத்தே அதனைச் செய்யவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், எதிர்கால தேர்தலில் எந்தவொரு கட்சியும் அறுதி பெரும்பான்மையை பெறமுடியாது. ஏனைய சிறு,சிறு கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்வது அவசியமாகும். பாராளுமன்றத் தேர்தலில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின், ஆட்சியமைப்பதில் பெரும் சிக்கல் நிலைமை ஏற்படும். அதனால்தான், வரப்பிரசாதங்களை கொடுத்து, ஒரு சிலரை ஆளும் பக்கத்துக்கு இழுத்துக்கொள்கின்றனர்.

இல்லையேல், சிறுபான்மை கட்சிகளில் இருந்து ஒவ்வொருவராக கழற்றியெடுத்து ஆட்சியை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கையில் இறங்குவர்.

பிரித்தெடுக்கும் காய்களை நகர்த்துவதை சிறுபான்மையின கட்சிகள் இனங்கண்டுகொண்டுவிட்டால், கட்சி பிளவுப்படுவதை தடுப்பதாக, முழு கட்சியும் இழுத்துச் சென்று ஆளும் கட்சிக்கு ஆதரவளித்துவிடுவர். சிறுபான்மையின கட்சிகளே அந்த நிலைமை ஏற்படும்.

கட்சி மாறுவதும் கொள்கை மாறுவதும் இலங்கை அரசியலுக்கோ சிறுபான்மை அரசியலுக்கோ ஒன்றும் புதியதல்ல. கடந்தகாலங்களில் நிறையவே நடந்திருக்கின்றன. எனினும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு ஆளும் கட்சிக்கு ஆதரவளித்த முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சர் நசீர் அஹமட்டுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அவருக்கு எதிராக நீதிமன்ற தீர்ப்பு வந்தமையால், அவர் எம்.பி பதவியை இழந்துள்ளார்.

எனினும், ஏனைய கட்சிகளில் இருந்து அரசாங்கத்துக்குத் தாவியவர்களுக்கு எதிராக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால், அரசாங்கம் ஆட்டம் கண்டுவிடும். இந்த தீர்ப்பு கட்சித் தாவ முயற்சிப்போருக்கு ஒரு பாடமாகும் என்பதுடன், வரப்பிரசாதங்களுக்கு விழுந்த ஆப்பாகும் என்பது மட்டுமே உண்மை.

எதிர்காலங்களில் தொங்கு பாராளுமன்றம் அமையுமாயின், அதற்கு ஆதரவளிப்பவர்களுக்கு இந்த தீர்ப்பு பெரும் நெருக்குதல்களைக் கொடுக்கும். அதுவே அரசியலில் பெரும் குழப்பகரமான நிலைமைகளை ஏற்படுத்தும்.

எனினும், தங்களுடைய குழுவில் போட்டியிட்டு வெற்றியீட்டியதன் பின்னர், தனிவழியில் செல்லும் எத்தனை பேர்களுக்கு எதிராக அந்தந்த கட்சிகள் நடவடிக்கை எடுக்கப்போகின்றன என்பதெல்லாம் தெரியாத விடயமாகும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எவராவது, யாரோ ஒருவரை உங்கள் முன்னால் திட்டினால், அவ்விடத்தை விட்டு அகலுங்கள். வைதல் இரசனைக்கு உரியதல்ல!

வீட்டுச் சண்டை, தெருச்சண்டை என்பவற்றை, இரசனையுடன் இரசிப்பதும் வக்கிர புத்திதான். காலத்தின் பெறுமதி தெரியாமல் கண்டபடி பொழுதை வீணடிக்கிறார்கள்.

தங்கள் மீது யாராவது சின்னக் குறைகளைச் சொன்னாலேயே ஆத்திரப்படுவார்கள். பிறரை எப்படிக் கேவலமாகப் பேசமுடிகின்றது? ஆணவமிடுக்கு தானாகவே ஆட்சிசெய்கின்றது.

மனித மனம் இரும்பு அல்ல, கடுமையான சொற்பிரயோகத்தை இரசிக்காது. ஆனால், மனிதர்களில் அநேகர், தங்களுக்கு ஒரு நியாயம், பிறருக்கு ஒரு நியாயமாக நடக்கிறார்கள். தாங்களே மிகச்சிறந்த நியாயவாதி என்றும் கூறுவர்.

துன்பங்கள் வரும்போது பேதலிக்கும் நபர்கள், ஏன் பிறரின் உணர்வைப் புரிந்துகொள்வதேயில்லை.

மானிடர்கள் யாவருக்கும் தாங்கள் ஒரே இனம் என எண்ணுவதுடன், பிறருடைய வலிகளையும் உணரும் திறன் வேண்டும். நியாயம் தப்பி வாழக்கூடாது; அனுசரியுங்கள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 22:

# அரசை உலுக்கிய மக்கள் எழுச்சியும் எதிர்வினைகளும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதந்திர இலங்கையின் 75 ஆண்டுகால வரலாற்றில் 'அரகலய' போராட்டத்திற்கு தனியான இடமுண்டு. ஆனால், இது இலங்கையர்கள் எழுச்சி கொண்ட முதலாவது சந்தர்ப்பம் அல்ல. இலங்கை சுதந்திரமடைந்து 5 ஆண்டுகள் நிறைவடைவதற்குள்ளேயே மிகப்பெரிய மக்கள் போராட்டம் 1953இல் வெடித்தது. இது இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியமான நிகழ்வு.

தோட்டத்துறை மூலம் வந்த பெருமளவிலான வெளிவருமானத்திற்கு கணிசமான பகுதி பிரித்தானிய முதலாளிகளிடையே போகிற விதமாகவே தேயிலை வணிகம் நடத்தப்பட்டு வந்தது. இரப்பர், தென்னை உற்பத்தி வருமானத்திலுங் கணிசமான பகுதி தரகர்களுக்கு கப்பற் கம்பனிகட்கும் போய்ச் சேர்ந்தது. இந்தத் துறைகள் மூலம் சம்பாதிக்கப்பட்ட அந்நியச் செலாவணி அத்தியாவசியமில்லாத பொருட்களின் இறக்குமதிக்கு விரயமானது. இலங்கையின் நெல் உற்பத்தி நாட்டின் தேவைக்குப் போதாத நிலையில், உணவுக்கான அரிசியின் குறிப்பிடத்தக்க பகுதி இறக்குமதியானது. எனவே, பொருளாதார நெருக்கடி ஒன்று, வரக் காத்திருந்தது.

இருந்தபோதும் 1952 தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது. மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை, பொருளாதார நெருக்கடி ஏற்படாமை, இடதுசாரிக் கட்சிகளிடையே ஒற்றுமையின்மை என்பன இதற்குக் காரணமாகின. 1951இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஐ.தே.கவிலிருந்து பிரிந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். டி.எஸ்.சேனநாயக்க தனக்குப் பிறகு தன் மகன் டட்லி சேனநாயக்கவை பிரதமராக்குவதற்கான நடவடிக்கைகளை அறிந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க எரிச்சலடைந்தார். டி.எஸ்.சேனநாயக்கவை விட அரசியல் அறிவிலும் விவாதத் திறமையிலும் சிறந்து விளங்கிய பண்டாரநாயக்க டி.எஸ்.சேனநாயக்கவுக்குப் பின்னர் தானே பிரதமராவார் என்று எதிர்பார்த்தார். இது நிகழாது என்ற நிலையிலேயே அவர் பிரிந்து சென்றார்.

இன்று இவ்விரு கட்சிகளிலிருந்து ஏற்பட்ட பிரிவுகளும் இதே காரணங்களுக்காகவே நிகழ்ந்தன என்பதே இலங்கையின் வரலாறு.

1952 தேர்தலில் வெற்றிபெற்ற சில காலத்தில் டி.எஸ்.சேனாநாயக்க மரணமடைந்தார். இந்த எதிர்பாராத நிகழ்வையடுத்து, பிரதமர் யார் என்ற அரசியல் வினாவை எழுப்பியது. தான் இறந்தால் தனது மகன் டட்லியைப் பிரதமராக்குமாறு டி.எஸ் ஆளுநர் சோர்பரியிடம் சொல்லியிருந்தார். கட்சியின் இரண்டாம் நிலையில், இருந்த பண்டாரநாயக்க விலகிய பின்னர் அவ்விடத்துக்கு வந்த டி.எஸ்ஸின் மருமகன் ஜோன் கொத்தலாவல, தானே பிரமராவார் என்று எதிர்பார்த்திருந்தார். ஆனால் ஆளுநர் டட்லியை பிரதமராக்கினார். சில காலத்தில் டி.எஸ்ஸின் அரசியல் சூழ்ச்சிகள் பற்றி கொத்தலாவலவின் ஆதரவாளர் எழுதிய Premier Stakes என்ற புத்தகம் மிகவும் பிரபலமானது. இந்தப் பின்னணியில் டட்லி பிரதமரானாலும் வரவிருந்த பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க இயலவில்லை. அப்போது நிதி அமைச்சராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன மேற்குலகப் பொருளாதார மாதிரியை வெகுவாக நேசித்தார். அதை நடைமுறைப்படுத்தவும் பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்கவும் உலகவங்கியிடம் கடன் வாங்கினார். உலக வங்கியின் கட்டளைகளுக்கு அமைய சமூக நலத்திட்டங்களைக் குறைத்து, சிலவற்றை இல்லாமல் செய்தார். பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட பகலுணவு நிறுத்தப்பட்டது. அரிசி விலைக்கு வழங்கப்பட்ட மானியம் நீக்கப்பட்டது. தபால், புகையிரதக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன.

விலைவாசி அதிகரிப்பை எதிர்த்து 12 ஒகஸ்ற் 1953 அன்று ஒரு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இடதுசாரிக் கட்சிகளும் அவற்றுக்குப் பின்னாலிருந்த தொழிற்சங்க அமைப்புக்களும் ஹர்த்தாலில் பூரண ஈடுபாட்டுடன் பங்குபற்றின. இங்கு மூன்று விடயங்கள் முக்கியமானவை. முதலாவது, பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதில் பங்குபற்ற மறுத்தது. இரண்டாவது, தோட்டத் தொழிலாளரிடையே மிகுந்த செல்வாக்குடைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேலை நிறுத்தத்தில் பங்குபற்ற மறுத்தது. மூன்றாவது, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஹர்த்தாலுக்கு ஆதரவளித்து பங்குபற்றியது. இம்மூன்றும் முக்கியமான செயல்கள். பண்டநாயாக்கவின் மறுப்பும் இ.தொ.காவின் தயக்கமும் அவர்களின் வர்க்க நலன்களின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவை. உயர்வர்க்க நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே தமிழரசுக் கட்சியின் தலைமைகள் இருந்தன. வடபுலத்தில் தமிழரசுக் கட்சியின் நிகழ்வுகளைத் தமிழ் காங்கிரஸ் காடையர்கள் குழப்பியதால் தமிழரசுக் கட்சி நிகழ்வுகளுக்கு இடதுசாரித் தோழர்களே பாதுகாப்பு வழங்கினார்கள். இந்த நல்லுறவு இந்த முடிவுக்கு ஒரு முக்கிய காரணம்.

எதிர்பார்த்ததை விட அதிகமான ஆதரவு ஹர்த்தாலுக்குக் கிடைத்தது. நாடே ஸ்தம்பித்தது. தோட்டத் தொழிலாளர்கள் தலைமைகளின் எதிர்ப்பையும் மீறி வேலை நிறுத்தத்தில் பங்குகொண்டர். சுதந்திர இலங்கையில் போர்க்குணம் மிக்க தொழிலாளர்களின் எழுச்சி ஒரு திரட்சியாக வெளிப்பட்ட தருணம் அது. அரசாங்கம் தரையில் கூடாமல் நடுக்கடலில் நங்கூரமிட்டிருந்த கப்பலில் கூடியது. அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தபட்டு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் பலியானார்கள்.

இந்த ஹர்த்தால் மூன்று முக்கியமான விடயங்களைச் செய்தது. இது இலங்கையின் இனத்துவ வரலாற்றின் முக்கிய பக்கங்களுக்கான இன்னொரு தொடக்கப்புள்ளியாக அமைந்தது என்பதை மறுப்பதற்கில்லை. முதலாவது, ஒரு நாளுக்கு மேல் வேலை நிறுத்தத்தைத் திட்டமிடாத இடதுசாரித் தலைமைகளால் ஹர்த்தாலின் வெற்றியை எவ்வாறு தக்கவைப்பது என்று தெரியவில்லை. திட்டமின்மையால் இந்த எழுச்சியை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற அவர்களால் முடியவில்லை. இன, மத, மொழி அடையாளம் கடந்த ஒரு இலங்கையர்களாக ஒருங்கிணைந்து அரசை உலுக்கிய போராட்டம் இடதுசாரித் தலைமைகளின் மெத்தனத்தால் வலுவிழந்தது.

இரண்டாவது, பிரதமர் நாற்காலியை எதிர்பார்த்துக் காத்திருந்த ஜோன் கொத்தலாவல இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். ஹர்த்தாலைத் தொடர்ந்து டட்லி சேனாநாயக்க பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய கொத்தலாவல பிரதமரானார். அவர் வெளிப்படையாகவே இனத் துவேசத்தைப் பேசினார். கொத்தலாவலவின் சகிப்பின்மை தமிழர்கள், இந்தியர்கள் பலரை புண்படுத்தியது. தனது தனிப்பட்ட காரணங்களுக்காக ஜி.ஜி. பொன்னம்பலத்தை அமைச்சரவையில் இருந்து நீக்கினார். அவருக்குப் பதிலாகக் கந்தையா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார். 1954ஆம் ஆண்டு பிரித்தானிய அரசி இலங்கைப் பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்தபோது, தமிழில் நன்றி தெரிவிக்க கொத்தலாவல அனுமதிக்கவில்லை என்று தமிழர்கள் கோபமடைந்தனர். கொத்தலாவல, இந்திய குடியுரிமை பெற்றவர்களுக்கு அதிக கட்டுப்பாடுகளை விதித்தார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இந்தியர்கள் மற்றும் இலங்கையர்கள் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்று கூறி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

மூன்றாவது, ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான மக்களின் எதிர்ப்புணர்வை எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தனக்கு சாதகமாக்கினார். பண்டாநாயக்கவின் அரசியல் எழுச்சியை ஹர்த்தால் சாத்தியமாக்கியது. அவர் இரண்டு விடயங்களை தனது முக்கியமான அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தினார். முதலாவது சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வ மொழியாக இருக்க வேண்டும் என்பதை தனது உணர்வுபூர்வமான தேர்தல் பிரச்சாரமாக முன்வைத்தார். பண்டாரநாயக்காவும் 1952 இல் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளின் சமத்துவத்தை ஆதரித்தார். ஆனால், அவர் சந்தர்ப்பவாதமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்களத்தை மட்டுமே அரச கரும மொழியாகவும், 'நியாயமான தமிழைப் பயன்படுத்துவதற்கான அனுமதியையும்' அறிவித்தார். பண்டாரநாயக்கவின் இரண்டாவது அரசியல் ஆயுதமாக, பௌத்த பிக்குகளை நேரடி அரசியல் இணைப்பு என்பது இருந்தது. அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் 1952 இல் உத்தியோகபூர்வமற்ற பௌத்த விசாரணைக் குழுவை உருவாக்கியது.

'பௌத்தத்தின் துரோகம்' என வெளியிடப்பட்ட அதன் அறிக்கை, பௌத்த நலன்களைப் புறக்கணிப்பதாக அரசாங்கத்தை குற்றம் சாட்டியது. பௌத்த மதத்தை வளர்ப்பதற்கும் சிங்கள-பௌத்த பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கும் பௌத்த தலைவர்கள் பௌத்தர்களின் கைகளில் அரசியல் கட்டுப்பாட்டை விரும்பினர். இதை பண்டாநாயக்க கையில் எடுத்து நாட்டை மீளமுடியாத அவலத்திற்குக் கொண்டு சென்றார்.

## கடிதங்கள்

### தீர்வின்றி தவிக்கும் ராணி மக்கள்

மஸ்கெலியா, ராணி தோட்டத்தில், 20 வீடுகளைக் கொண்ட லயன், 2017ஆம் ஆண்டும், 20 வீடுகளைக் கொண்ட மற்றுமொரு லயன், 2021ஆம் ஆண்டும் தீப்பற்றி எரிந்தன. இதனால், 40 வீடுகளைச் சேர்ந்த சுமார் 170 பேர் பாதிக்கப்பட்டனர்.


பாதிக்கப்பட்ட அனைவரும் ராணி தோட்ட தமிழ் பாடசாலையில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டனர். கற்றல் நடவடிக்கைகளில் இடையூறு ஏற்பட்டதால் பாடசாலையில் தற்காலிகமாக தங்க வைக்க பட்டு இருந்தவர்கள் உறவினர் இல்லங்களில் தற்காலிகமாக தங்கினர்.

இக் காலத்தில் தோட்ட நிர்வாகம், 40 குடியிருப்பு பகுதியில் இருந்த அகற்றப்பட்ட கூரை தகடுகள் மற்றும் புதிய கூரை தகரங்கள் என 36 குடும்பங்களுக்கு தலா 20 தகரங்கள் வழங்கப்பட்டன. ஏனைய 4 குடும்பங்களுக்கு எந்த விதமான வசதிகளும் பொருட்கள் வழங்கவில்லை.

அந்த காலகட்டத்தில் இருந்த அமைச்சர், வீடுகளைக் கட்டி தருவதாக கூறினார். எனினும், இன்று வரை எவ்விதமான பணிகளும் செய்ய வில்லை. ஆகையால், கைவிடப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தை மீள ஆரம்பிக்குமாறு அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

செ.தி.பெருமாள்






Airtel Sri Lanka இடமிருந்து

# இந்தியாவுக்கான Roaming

எயார்டெல் லங்கா, இந்தியாவிற்கு பயணம் செய்யும் உள்ளூர் எயார்டெல் பாவனையாளர்களுக்காக புதிய Roaming Packகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்தியா மற்றும் இலங்கை முழுவதும், தமது வாடிக்கையாளர்கள் எங்கிருந்தாலும் கட்டுப்பாடற்ற இணைப்பு அனுபவத்தை பெற்றுக் கொள்வதை உறுதிசெய்ய சிறந்த மதிப்பை வழங்குவதில் எயார்டெல் கவனம் செலுத்துகிறது. இந்தியாவிற்கு அடிக்கடி பயணம் செய்யும் தமது வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதைக் கவனித்துள்ள நிலையில், எயார்டெல் இந்தியா சர்வதேச Roaming Packகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், இந்த மதிப்பை எல்லைகளுக்கு அப்பால் கொண்டு சென்றுள்ளதாக எயார்டெல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


“இதன் விளைவாக, எங்கள் வாடிக்கையாளர்கள் இப்போது தங்களது அன்புக்குரியவர்களுடன் இணைந்திருக்க முடியும் மற்றும் வீட்டில் இருப்பது போன்ற அனுபவத்தை தருவதுடன், அது மேலதிக செலவையும் குறைக்கிறது. சந்தையில் மிகவும் மலிவு விலை சர்வதேச Roaming கட்டணத்தை, இந்தியா முழுவதும் எயார்டெல் உலகத் தரம் வாய்ந்த வலையமைப்புடன் இணைப்பதன் ஊடாக, இந்த புதிய இந்திய சர்வதேச Roaming திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு என்றுமில்லாத சர்வதேச Roaming அனுபவத்திற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம் - இது இரு நாடுகளுக்கும் சிறந்தது.” என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷிஷ் சந்திரா தெரிவித்தார்.

எயார்டெல் பாவனையாளர்கள், இந்தியாவிற்கு அடிக்கடி செல்லும் பயணிகள், புனித யாத்திரை குழுக்கள், வர்த்தக மற்றும் ஏற்றுமதி சமூகங்கள் மற்றும் இந்திய சுற்றுலா விடுமுறைகளை ஏற்பாடு செய்யும் சுற்றுலா வழிகாட்டிகள் உட்பட பலர், இப்போது எயார்டெல்லின் மலிவு மற்றும் அணுகக்கூடிய இந்திய சர்வதேச Roaming Packageஐப் பயன்படுத்தலாம். இந்தியாவின் மிகவும் பரந்த மற்றும் சிறந்த வலையமைப்புடன், அவர்கள் ‘வீட்டில் இருப்பதைப் போன்ற’ அனுபவத்தை பெறலாம்.

Recharging செய்த பின்னர் USSD Activation மூலம் Packageஐ எளிதாக செயல்படுத்த முடிவதுடன், மேலும் எயார்டெல் Online Portal, விற்பனை நிலையங்களில் (Over-the-counter -OTC), Recharge.lk போன்ற மின்னணு பணப்பைகள் மற்றும் My Airtel App ஆகியவற்றின் மூலம் எளிதாக செயல்படுத்திக் கொள்ள முடியும் எனவும் அறிவித்துள்ளது.

எயார்டெல் லங்கா, இலங்கையில் தொலைத்தொடர்பு சேவைகளுக்கான தொழில்நுட்பத்தை மாற்றியமைத்து வருகிறது. இதன் புதிய 4G Freedom Packகளை அறிமுகப்படுத்தி, அனைத்து புதிய 4G வலையமைப்புடன் முழுமையாக பொருந்தி, முற்கட்டணம் செலுத்தும் இணைப்புகளை மேம்படுத்தியுள்ளது.

## MMCA இலங்கை தனது முதல் சர்வதேச நிகழ்வை முன்னெடுக்கிறது



நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (MMCA இலங்கை) அதன் முதலாவது சர்வதேச கலை நிகழ்வை நடத்தவுள்ளது. MMCA இலங்கையானது, இலங்கை கலைஞர்களின் கலைப்படைப்புகளை சிறப்பாக தொகுத்து, இந்நிகழ்வை இந்த ஒக்டோபர் மாதம் லண்டனில் வழங்கவுள்ளது. கலை உலக நாட்காட்டியின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றான London’s Frieze வாரத்துடன் (11-15 ஒக்டோபர் 2023) நடக்கும் இந்த நிகழ்வில், MMCA இலங்கை தற்போது நடத்தும் ‘அந்நியர்’ என்ற தலைப்பிலான கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காணொளி படைப்புகள் காண்பிக்கப்படும். அவற்றைத் தொடர்ந்து தேர்ந்த குழுவுடனான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படும்.

இந்த நிகழ்வு, ஆண்டுதோறும் Deutsche Borse Photography Foundation பரிசை வழங்கும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட அருங்காட்சியகமான The Photographers’ Gallery லண்டனுடன் இணைந்து, ஒக்டோபர் 12ம் திகதி நடைபெற்றது.

‘அந்நியர்’ கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காணொளி திரையிடல்களில் டினெல்க லியனகே, ஹனியா லுதூபி, இமாத் மஜீத், நீனா மங்களநாயகம் மற்றும் சுமுதி சுரவீர ஆகியோரின் படைப்புகள் உள்ளடங்கியிருந்தது. அதைத் தொடர்ந்து, இங்கிலாந்திலுள்ள எடுத்தாளுனர், எழுத்தாளர் மற்றும் ஆய்வாளரான ஹமாட் நாசரின் தலைமையில், MMCA இலங்கையின் தலைமை எடுத்தாளுனர் ஷாமினி பெரேரா, எடுத்தாளுனர் சந்தேவ் ஹன்டி மற்றும் கலைஞர்களான நீனா மங்களநாயகம் மற்றும் ரெஜினோல்ட் எஸ். அலோய்சியஸ் ஆகியோருக்கு இடையேயான கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஹன்டி இந்நிகழ்ச்சியைப் பற்றி பேசுகையில், “Frieze வாரத்தில் ‘அந்நியர்’ கண்காட்சியின் ஒரு பகுதியை லண்டனுக்கு எடுத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது, ஏனெனில், அந்நியத்துவத்தின் சிக்கிய அனுபவங்களை கண்காட்சியில் உள்ள படைப்புகள் பல்வேறு வழிகளில் எடுத்துக்காட்டுகின்றன. இடம்பெயர்வு, காலநிலை மற்றும் புகலிடம் பற்றி உலகம் முழுவதிலும் நடைபெறும் கலந்துரையாடல்களில் இது முன்னணியில் உள்ள ஒரு விடயமாகும்” என்று கூறினார். “இந்த நிகழ்வானது, இந்த தீவின் உள்ளூர் கலை வரலாறுகளை ஒன்றிணைத்து, உலகளாவிய கலை வரலாறுகளில் இல்லாதவற்றைத் தெரிவிக்கவும் நிரப்பவும் உதவுவதுடன், அந்நியத்தன்மை குறித்து மக்களது கண்ணோட்டத்தையும், வேறுபட்டவர்களை வகைப்படுத்துவதற்கு காலாகாலமாகப் பயன்படுத்தப்பட்டுள்ள உருவகங்களையும் எதிர்த்து, மீள் கற்பனை செய்து, மாற்றியமைக்கும் என்று நம்புகிறேன்,” என ஹன்டி மேலும் கூறினார்.

பொது மக்கள், பாடசாலைகள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நன்மை மற்றும் மகிழ்ச்சிக்காக நவீன மற்றும் சமகால கலைகளின் காட்சி, ஆராய்ச்சி, சேகரிப்பு மற்றும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள நாட்டின் முதல் அருங்காட்சியகமான MMCA இலங்கையிற்கு சர்வதேச கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்த முக்கிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. “கலை உலக நாட்காட்டியில் இது போன்ற ஒரு முக்கியமான நேரத்தில், லண்டனில் உள்ள The Photographers’ Gallery உடன் எங்களது கூட்டு முயற்சியானது, MMCA இலங்கையை உலகளாவிய பார்வையாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வரும்” என்று குறிப்பிட்ட பெரேரா, “சர்வதேச கலை உலகில் ஏற்கனவே நடந்தவற்றை மேலும் கட்டியெழுப்ப விரும்புகிறோம். மிக முக்கியமாக ஆராய்ச்சி, உள்ளூர் அறிவு மற்றும் ஒரு அருங்காட்சியகம் உருவெடுக்கும்போது அதிகரிக்கும் நிபுணத்துவம் ஆகியவற்றின் நிலையிலிருந்து உரையாடலை வடிவமைப்பதன் மூலம் அதனைப் பெருக்கி கட்டியெழுப்ப விரும்புகிறோம்,” என்று மேலும் விபரித்தார்.

## இதய தேடல்

முடுபனியுள் தொலைந்த நகரில்
இரவும் பகலும் சுயமிழந்த பொழுதொன்றில்
நீ நானாய் இருக்கிறாய்.

சூறைமழையின் ஈரப்பிசுபிசுப்பில்
கூதல் குருவிகளின் காதல்
கழிவுகளை தேடிப்பொறுக்கிச் சுமந்து
எறும்புகள் பதுக்குகின்றன.

பேருந்தின் சாளரங்களூடே
பின்னோடும் மரங்களைப் போல்
நெருக்குவாரச் சாலையில்
வெள்ளைப் பன்றியென
சலனமேதுமின்றி கடக்கிறாய்
விதி.



நீ அறுபட்டிருக்கும் இந்நாட்களில்
வேறுவித மனநிலை
உளத்தல் இரவோடும் உளைச்சல் மனதோடு
நினைவு தப்பத் தப்ப உலாத்துகிறேன்
நீ பத்திரம்.

நீ உன்னோடு மட்டும் உயிர்க்கிறாய்.
உனது இருத்தல் அசாத்திமானதும்
ஆர்ப்பரிப்பற்றதும் ஆயினும்
குழுவாசிகளை குழப்பமடைய
செய்வதாயிருக்கிறது போகட்டும்.

இப்பன்றிமய்ய வாழ்தலில்
முடிந்தவரை உனதையும் நிறுவு.

–சம்பூர் வதனரூபன்






## உன் பக்கமோடு (சிலேடை)

ஆசையாய் தட்டி
எடுத்துக் கொண்டேன்
உன்னுள் இறுகிய இதழ்களை
தட்டி நினைகிறேன் அறிவில்
உணர்வின் ஊடுருவல்களில்
உந்தித்தள்ளி தட்டித்தள்ளுகையில்
பட்டுத்தெறித்த தென்றல் வேகமாய்
உன் பக்க வாசம் அள்ளி வந்து
மேலும் இறுக்கிக் கொள்கிறது
உன்னோடான கூடலை
மெத்தப் பெரிய பாசம் உன்னோடு
எனக்கு ஏனோ
உலகியல் தந்த சலிப்பு
உன்னோடு உரைவில்லை உத்தமனே
தற்பெருமை தாழா
உன்தலைக்கு
உன் பெருமை
உனக்குரைக்க என்னாசை
எழுதிவிட்டேன்
நீ கேட்பாய் என்று
கேட்கிறது உலகமே.



பிரசாத் சரணியா – திருகோணமலை



## கிறுக்கி

யுத்தமிடும்
சத்தங்களுக்கெல்லாம்
காற்று
அமைதியிழக்கிறது
மசூதிகளில்
குடியமர்த்தப்பட்ட
புறாக்கள்
நேற்றோடு
சமாதானத்திற்கான
கீதமிசைத்தபடி
சிறகடித்துப் பறக்கின்றன
எங்கேனும்
மதமற்ற மடாலயங்கள்
தமக்காக
கட்டப்பட்டிருக்கின்றனவா
என்ற தேடல் நோக்கி...!



–சுமி

## கோடை மழை

காய்ந்துவிட்டது நிலமெல்லாம்
வானம் பார்த்து ஏக்கம்..

அடர்ந்த காடு காய்ந்த மரங்கள்
சருகான புல்வெளிகள் வற்றிய பள்ளங்கள்
வறண்ட நாவோடு
பறவைகளும் மிருகங்களும்.

ஒருதுளி நீர் வீசிய வெப்பக் காற்றில்
அசையாமல் அண்ணாந்து பார்க்கும்
கண்கள்....
பெய்வதும் பொய்யாகுமோ?
என ஏங்கும் மனதுடன் கமக்காரர் வயல்களில்

வற்றும் குளத்தில். மீனுக்கு பஞ்சமில்லை
நீரின்றி செத்தவை போக..
துர்நாற்றம் வீசும் குளங்களும் ஆறுகளும்
காத்துக்கிடக்கிறது கோடை மழையைத் தேடி.....

ஜீ.ஜே. பிரகாஷ்.
திருகோணமலை









## கொல்லைப்புற கோழி முட்டைகள் மூலம்

# வளமான எதிர்காலம்



டொக்டர் சித்ராஞ்ஜனி தேவதாசன்
(கால்நடை சிரேஷ்ட வைத்தியர்கள் சங்கம்)

1996ஆம் ஆண்டு தொட்டு வருடந்தோறும் ஒக்டோபர் மாதம் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் உலக முட்டை தினம் கொண்டாடப்படுவதையிட்டு இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

முட்டை ஒரு மலிவான, ஏராளமான சத்துக்கள் நிறைந்த ஓர் உணவு என்பதைக் குறிப்பதற்காக உலக முட்டைகள் தினம் கொண்டாடப்படுகிறது. முட்டையிலுள்ள உயர்தர புரதம், மனித உணவில் தேவைப்படும் எல்லா அமினோ அமிலங்களையும் கொண்டுள்ளது.

அத்துடன், விற்றமின்கள் ஏ, டீ, கோலின், டீ12 என்பவற்றுடன் மிக முக்கிய கனியுப்புகளான பொஸ்பரஸ், துத்தநாகம் மற்றும் செலினியத்தையும் கொண்டுள்ளது. முட்டையில் ஒமேகா-3 கொழுப்பமிலங்களும் அன்ரி-ஒக்சிடன்ற்களும் நிறைந்துள்ளன.

1960ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் முட்டை உற்பத்தி பெரிதாக வளர்ந்திருக்கவில்லை. கொல்லைப்புற தேசிய இனக் கோழி வளர்ப்பின் மூலம் பெறப்பட்ட முட்டை உற்பத்தி மிக குறைவாகவே காணப்பட்டது. இது அந்த குடும்பத்திற்கு மட்டுமே போதுமானதாகவும் குறைந்தளவு முட்டைகள் விற்பனைக்கும் பயன்பட்டன. உணவிற்கு தேவையான முட்டைகள் இந்தியாவிலிருந்தே பெறப்பட்டன.

அதன் பின்னர், சேவல் மாற்றீட்டுத் திட்டம் மூலம் தரமுயர்த்தப்பட்ட சேவல்கள் வளர்க்கப்பட்டு, நாட்டின் கோழி முட்டை உற்பத்தி கூடியது.

பின்னர், படிப்படியாகத் தனியார் துறையினரால் வாணிப முட்டைக் கோழிப் பண்ணைகள் தொடங்கப்பட்டன. உயர் உற்பத்திக்கான கோழி இனங்கள் மூலம் உணவிற்கான முட்டை உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் கூடியது. அதன் விளைவால், உணவிற்கான முட்டை இறக்குமதி 1960களில் நிறுத்தப்பட்டது.

> **கிராமப்புற வீடுகளில் மிகவும் குறைந்த முதலீட்டுடன் மேற்கொள்ளப்படக்கூடியது கோழி வளர்ப்பு ஒன்றுதான்**

உயர்தொழினுட்ப பராமரிப்புகளின் மூலம் வாணிப முட்டை உற்பத்தித்துறையானது மிகவும் வளர்ச்சியடைந்ததால், உணவிற்கான முட்டை உற்பத்தியில் இலங்கை தன்னிறைவை அடைந்தது. ஆனாலும், கொல்லைபுற கோழி வளர்ப்பும் முக்கியமாக கிராமப்புறங்களில் தொடர்ந்து கொண்டிருந்தது. இது பெரிய அளவில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டதால், தேசிய முட்டை உற்பத்திக்கு பெரும் பங்காற்றியது.

கோழி முட்டை என்பது வருமானம் குறைந்தவர்களுக்கான ஒரு மலிவான விலங்குணவாக இருந்த போதிலும், தற்போதைய சூழ்நிலையில் இது ஏழை மக்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது.

இந்நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் முட்டை உற்பத்திக்கான செலவு மிகவும் கூடியதும், அதனால் முட்டை பற்றாக்குறை ஏற்பட்டதும் இதற்கு காரணமாக உள்ளது.

இப்பிரச்சினையை ஓரளவு குறைக்க வேண்டுமானால், கொல்லைபுற கோழி வளர்ப்பில் ஈடுபட்டு மேம்படுத்தப்பட்ட பராமரிப்பு மற்றும் சுகாதாரம் பேணப்படவேண்டும். முக்கியமாக கிராமப்புறங்களில் ஒவ்வொரு வீட்டிலும் கோழி வளர்ப்பில் ஈடுபட்டால், குடும்பத்திலுள்ள அனைவருக்கும் அன்றாடம் தேவையான புரத உணவாக முட்டையை இலகுவாக பெறக்கூடியதாய் இருக்கும்.

கிராமப்புற வீடுகளில் மிகவும் குறைந்த முதலீட்டுடன் மேற்கொள்ளப்படக்கூடியது கோழி வளர்ப்பு ஒன்றுதான். இதன்மூலம் பெறப்படும் முட்டை, இறைச்சி என்பன மிகச்சிறந்த விலங்குப் புரதமாகும். இக்கோழி வளர்ப்பு 100 வருட காலங்களுக்கு மேற்பட்டது.

இவ்வாறான கோழி வளர்ப்பின் மூலம் கிராமப்புற மக்கள் பலவிதமான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். குறைந்தளவு முதலீட்டுடன் ஆரம்பித்து அதிகூடிய வருவாயை பெறலாம்.

ஆகக்குறைந்தது இரண்டு கோழிகளில் ஆரம்பித்து, அதிகூடிய எண்ணிக்கையில் கோழிகளை வளர்க்கலாம். பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் கூட மிக இலகுவாக இக்கோழி வளர்ப்பில் ஈடுபடலாம்.

இக்கோழிகளுக்கு சமையலறை மிகுதிகள் மற்றும் விவசாய உற்பத்தி மிகுதிகள் போன்றவற்றை உணவாகவும் கூடுகளை அமைப்பதற்கும் பாவிக்கலாம்.

முட்டை, இறைச்சி என்பவற்றை சந்தைகளில் விற்கக்கூடியதாக இருப்பதோடு, இதனால் குடும்ப வருமானமும் போஷாக்கும் கூடுகிறது.

இக்கோழி வளர்ப்பின் மூலம் குடும்பத்தின் தேவைகேற்ப கோழிகள், முட்டைகளை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் விற்று பணம் பெறலாம்.

> **கோழிகள் வீட்டின் செல்லப்பிராணிகளாகவும் பார்க்கப்பட்டு குடும்ப அங்கத்தவர்களுக்கு மன மகிழ்ச்சியையும் கொடுக்கின்றன**

ஏனைய விவசாயத்தொழில் செய்யமுடியாத குடும்ப உறுப்பினர்கள் கூட, தம் உழைப்பால் குடும்ப வருமானத்தைக் கூட்டக்கூடியதாக இருக்கும். மேலதிக வேலையாட்கள் தேவையில்லை.

இது சேதனமுறை கோழி வளர்ப்பு ஆதலால், இறைச்சி, முட்டை என்பவற்றின் தரம் உயர்ந்தது. ஏனெனில், கோழிகள் மனஅழுத்தமற்ற சுற்றாடலில் இயற்கை உணவுடன் வளர்க்கப்படுகின்றன.

கொல்லைப்புற கோழி வளர்ப்பில், இக்கோழிகள் வீட்டின் செல்லப்பிராணிகளாகவும் பார்க்கப்பட்டு குடும்ப அங்கத்தவர்களுக்கு மன மகிழ்ச்சியையும் கொடுக்கின்றன. கோழி எச்சங்களை சேகரித்து, சேதன உரமாக்கி வீட்டுத்தோட்டங்களுக்கு பாவிக்கக்கூடியதாக இருக்கும்.

இக்கோழிகளை பகலில் முற்றத்தில் உலாவவிட்டு, இரவில் கூட்டில் விட்டு வளர்க்கலாம். எமது தேசிய இனக் கோழிகளிலிருந்து வருடத்திற்கு 70-80 முட்டைகளை மட்டுமே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் தற்போது இவற்றின் தரமுயர்த்தப்பட்ட இனங்கள் கொல்லைப்புற கோழி வளர்ப்பில் ஈடுபடுத்தப்பட்டு, தகுந்த பராமரிப்பும் தகுந்தளவு தரமான இயற்கை உணவு கிடைக்கக்கூடியதாகவும் வளர்க்கும்போது, இவற்றிலிருந்து வருடத்திற்கு 150 - 200 முட்டைகளை பெற்றுக்கொள்ள முடிகிறது. 2-3 வருடங்கள் வரை இவற்றிலிருந்து தரமான முட்டைகளை பெற்றுக்கொள்ளலாம்.

தேசிய இனக்கோழிகள் மூலம் இம்முட்டைகளை அடைகாக்க வைத்து, இயற்கை இனப்பெருக்க முறையில் குஞ்சுகளை பெற்றுக்கொள்ளலாம்.

12-15 முட்டைகளை ஒரு கோழி அடைகாப்பதற்கு வைக்கலாம். மரம், மூங்கில், புல், கிடுகு போன்ற பொருட்களைக் கொண்டு மலிவான முறையில் கோழிக் கூடுகளை அமைத்துக் கொள்ளலாம். பகல் நேரங்களில், கோழிகளை முற்றத்தில் திறந்து விடும்போது, அவை புற்றரைகளில் மேய்ந்து பூச்சிகள், நத்தைகள், கறையான்கள், புற்கள் மற்றும் களைகளின் விதைகள், வீசப்பட்ட தானியங்கள், பயிர்களின் எஞ்சிய பாகங்கள், சமையலறைக் கழிவுகள், பழங்கள் மூலமாக தமக்குத் தேவையான புரதம் கனியுப்புகள், விற்றமின்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்கின்றன. குருணை அரிசி, நிலக்கடலைக் கோது, தவிடு போன்றவற்றையும் உணவாக வழங்கலாம். கிரமமான முறையில் பூச்சிமருந்து, தடுப்பூசி போன்றவற்றை வழங்கி, இக்கோழிகளின் ஆரோக்கியத்தை சிறப்பாகப் பேணமுடியும். மேற்கூறப்பட்டவாறு மலிவான முறையில் கொல்லைப்புற கோழி வளர்ப்பில் ஈடுபடுவதன் மூலம் வருமானத்தைப் பெருக்குவதோடு, குடும்ப ஆரோக்கியம் மற்றும் மனமகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளலாம்.

## மலையக இலக்கியத்திற்கு வலிமை சேர்க்கும்

# வல்லமை தாராயோ



தாட்சாயணி –

ஈழத்து இலக்கியத்தின் தவிர்க்கப்பட முடியாத பகுதியாகிய மலையக இலக்கியத்திற்குத் தமது காத்திரமான பங்களிப்பை வழங்கியோர் பலர். மலையகத்தைச் சேர்ந்தோராலும், தம் வாழ்க்கையின் குறிப்பிட்ட காலகட்டத்தை மலையகத்தில் கடக்க நேர்ந்தவர்களாலும் இழைத்துப் பின்னப்பட்ட பின்னலென மலையக இலக்கியம் செழுமை கண்டிருக்கிறது. கே.ஆர்.டேவிட், நந்தி, தி.ஞானசேகரன் போன்ற மலையகத்தில் வாழ்ந்தறிந்த எழுத்தாளர்களின் நாவல்களூடாக மலையகம் பற்றிய தோற்றமொன்றைக் கண்டிருந்த எனக்கு மலையக மக்களின் வரலாற்றோடு இணைந்தவராக மாத்தளை வடிவேலன் முன் வைக்கும் இன்னொரு சித்திரத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் வல்லமை தாராயோ எனும் இச் சிறுகதைத் தொகுதி மூலம் கிட்டியது.

வல்லமை தாராயோ? எனும் இத் தொகுப்பின் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டவர்களும் மலையக மக்களின் துன்ப துயரங்களில் ஒன்றாக நின்று உழைத்தவர்கள். அண்மையில் தனது எழுபதாம் அகவையை நிறைவு செய்த மு.நித்தியானந்தன் மற்றும் மாத்தளை வடிவேலனுடன் ஒருசாலை மாணாக்கராக வளர்ந்த எச்.எச்.விக்ரமசிங்க இருவரும் இணைந்து மலையக மக்களின் வரலாறும், கண்ணீரும் நிறைந்த இந்த ஆக்க இலக்கியப் படைப்பை உலகின் முன் வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். தொகுப்பில் இணைக்கப்பட்டிருக்கும் அவர்கள் இருவரதும் முன்னுரையும் வெளியீட்டுரையும் இத் தொகுதியின் கதைகள் புரிய வைக்கும் உணர்வுகளின் வரலாற்றுப் பின்னணியை இணைக்கும் சரடுகளாகின்றன.

மாத்தளை மண் அங்கு அமைந்திருக்கும் முத்துமாரியம்மன் ஆலயத்தினால் பிரசித்தி பெற்றது. அத்தகைய மாத்தளை நகரினூடாகக் கண்டிக்கு நகர்த்தப்பட்ட பல்லாயிரம் கூலித் தொழிலாளிகளின் பயணத்தையும், அவர்கள் அடைந்த இடர்களையும் இக்கதைகள் தோறும் வடிவேலன் பதிவு செய்கிறார்.

பதின்நான்கு கதைகள் அடங்கிய இத்தொகுப்பிலுள்ள கதைகள் ஒன்றில் தானும் கதாசிரியர் மலையக மண் சார்ந்த பிரச்சினையைச் சொல்லாமல் விட்டதில்லை. அதற்கேற்றாற் போலவே இத் தொகுதியின் அட்டைப்படமும் காலாதிகாலமாய்க் கொழுந்துக் கூடையைக் கொழுவியபடி நலிந்து போன ஒரு மலையகத் தாயின் தீராத் துயரை அப்பட்டமாகப் பிரதிபலிக்கிறது. இருந்தும் இத்தனை அவலங்களிலிருந்தும் மீண்டெழும் அவாவை இறைஞ்சிய தொகுதியாய் பிரதிபலிக்கிறது. இருந்தும் இத்தனை அவலங்களிலிருந்தும் மீண்டெழும் அவாவை இறைஞ்சிய தொகுதியாய் இத்தொகுப்பு வல்லமை வேண்டி மலர்கிறது. மலையகத்தவர் துயரங்களில் பாதியேனும் உரிய தரப்புகளால் தீர்க்கும் வகையில் இந்நூல் வேண்டியவர்களை சென்றடையுமெனில் அதுவே இத் தொகுதிக்குக் கிடைக்கும் வெற்றியாகும். அத்துடன் தமிழகத்தின் ‘தாய்’ பதிப்பகம் இச்சிறுகதைத் தொகுதிக்கு ஒரு இலட்ச ரூபாய் பரிசளித்துக் கௌரவித்ததும் குறிப்பிடத்தக்கது.

இத் தொகுதியிலமைந்துள்ள தாத்தாவின் ரெங்குப்பெட்டி எனும் முதலாவது கதை மலையகத் துயரின் ஆதி இழையைப் பிடித்து அலசுவதாக அமைந்துள்ளது. வரலாற்றுப்பாங்கான விடயங்கள் இக்கதைக்கு வலுச் சேர்க்கின்றன. சிறு மனதில் இருக்கும் தாத்தாவின் ரெங்குப் பெட்டி பற்றிய வியப்பும், காலப் போக்கில் யுத்தகாலப் பாதிப்புக்கள் தாக்கத் தொடங்கும் போது அதற்கு முதல் காரணமாக தாத்தா, பாட்டி ஏன் இங்கு வந்தனர் என எழும் வெறுப்பும், தமிழகத்திலிருந்து வந்தவர்கள் மீது கண்டித் தொழிலாளருக்கு இருந்த காழ்ப்புணர்வும் சிறப்புற விபரிக்கப் படுகின்றன. மேலும், ரெங்குப் பெட்டியினுள் கிடந்த ஆவணமாக அந்தக் காலத்தில் இலங்கைக்கு கூலித் தொழிலாளர்களைக் கோரும் விளம்பரம் காணக் கிடைக்கிறது.

அவ்விளம்பரத்தில் இலங்கைக்கு வர விரும்புவோர் யாரைத் தொடர்பு கொள்ள வேண்டும், இலங்கையில் அவர்களுக்குக்கிடைக்கும் சலுகைகள், வசதிகள் தற்போதைய மலையக மக்களின் நிலையை எண்ணிக் கண்ணீர் சிந்த வைக்கின்றன. முதியோருக்கு அவர்கள் விரும்பிக் கேட்கும் சாராயத்தைப் படையலிடல், ரெங்கு பெட்டியைச் சம்பிரதாயபூர்வமாகத் திறத்தல் என்பன போன்ற விபரிப்புகளும் வாசிப்பின் சுவாரஸ்யத்தைக் கூட்டுகின்றன.

நாடு கடந்த நதிகள் இத்தொகுப்பின் இன்னொரு கதை. பபூன் வீரையா சிறுவனாகவிருந்தபோது அனாதையாக கலைதாசனின் சலூன் வாசலில் ஒதுங்கி நின்று சலூன் தொழில் பழகியவன். நாடகங்களில், தெருக் கூத்துகளில் பபூனாக நடித்ததன் மூலம் பபூன் வீரையா எனும் நிரந்தர பெயருக்குச் சொந்தக்காரன் ஆனவன். கங்காணி மகள் அவன் மேல் காதல் கொள்கிறாள். கங்காணியின் திட்டத்தினால் கடைசியில் பதிவு எதுவுமற்ற காரணத்தைச் சாட்டி பொலிஸாரால் கைது செய்யப்படுகிறான். யாருமற்ற அனாதையாயிருந்த அவன் ஒரு காதலைக் கண்டடைந்த போதிலும், கடைசியில் கங்காணியின் சூழ்ச்சியால் கடவுளாலும் கை விடப்பட்டவனாகிய நிலையைத் துயரத்தோடு விபரிக்கின்றார் கதாசிரியர். தோட்டப்பகுதிகளில் எவ்வெவ்விடங்களில் எவ்வாறு தோட்ட மக்களின் தலைமுடி சிரைக்கப்பட்டது, சலூன்கள் வந்த பிறகு நாற்காலியிலமர்ந்து கண்ணாடி பார்த்து தலை சிரைக்கும் நாகரிகம் என இன்றைய தலைமுறை அறியாத விடயங்களும் கதையினூடு வெளிப்படுகின்றன.

இத்தொகுப்பின் தலைப்புக் கதையாகிய வல்லமை தாராயோ தொழிற்சங்கத்த தலைவனான கறுப்பையா எதிர்நோக்கும் சிக்கல்கள் பற்றிப் பேசுகிறது. தொழிலாளிகளின் நலன் பற்றியே எப்போதும் சிந்திக்கும் கறுப்பையா ஒவ்வொரு தொழிலாளியினதும் பிரச்சினையை தொழிற்சங்கத்திற்கு எடுத்துச் செல்கிறான். கொழுந்து மடுவத்திற்குக் கொழுந்து எடுத்துச் செல்லும் போது கர்ப்பிணிப் பெண்ணொருத்தி மயங்கி வீழ்ந்த பிறகு, கர்ப்பிணிகளினதும், வயோதிபர்களதும் கொழுந்துகளை இளையோரே கொண்டு சென்றனர். தோட்டத்திற்கு வந்து கொழுந்தினை எடுக்க வேண்டுமென்று இரு வாரங்கள் நடந்த வேலை நிறுத்தத்தில் அவர்களுக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை. இரவோடிரவாக அரிசிக் காம்பிராவை ஒரு லொறியில் கபளீகரம் செய்தபின் கருப்பையா, மாணிக்கம் உள்ளிட்ட தொழிற்சங்கவாதிகளே அவற்றைக் கொள்ளையடித்ததாக தோட்ட நிர்வாகம் பொலிஸுக்கு தகவல் கொடுக்கிறது. இவ்வாறாக உரிமைக்கு குரல் கொடுக்குந்தோறும் தொழிற்சங்கவாதிகளான இளைஞர்கள் எவ்வாறு அதிகாரத்தினால் பழிவாங்கப்படுகிறார்கள் என்பதனை அழகாக இக்கதையில் பிரதிபலிக்கிறார் கதாசிரியர்.

அடுத்த கதை அக்கினி. தவறணையில் தேயிலைச் செடிகளுக்கு நீரூற்றி வளர்க்கும் ரெங்கையாக் கிழவன், மனைவியை இழந்தவன். அங்குள்ளோருக்குத் தாத்தாவாகவும், அப்பாவாகவும், பெரியவராகவும் உதவி செய்து கொண்டிருப்பவன். இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்குப் பிறகு தமிழகத்தில் தன் சொந்த ஊரில் உயிர் விடும் விருப்பில் பாஸ்போட் எடுத்துத் தன் உடுபுடவைகளைக் கட்டி வைத்து விட்டு ஊருக்குத் தேநீர் விருந்து வழங்குவதற்காக, பழங்கள் வாங்க சந்தைக்குச் சென்று திரும்புகிறான். திரும்பி வரும்போது, காடையரால் அவர்களது தோட்டம் கொளுத்தப்பட்டு, கிழவனின் உடுபுடவைகளும், பாஸ்போட்டும் எரிக்கப்பட்டு அவனது நெஞ்சில் அக்கினியைக் கிளப்புகின்றன. மலையகம் தோறும் இவ்வாறு எழுகின்ற பல்வேறு பிரச்சினைகளும் ஒவ்வொரு உயிரையும் எப்படி வதைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை அருகிருந்து பார்த்த சாட்சியாக விபரிக்கின்றார் மாத்தளை வடிவேலன்.

இராமு தீபாவளிக்குத் தனது தோட்டத்திற்கு வருகிறான் இன்னொரு அவலச்சுவை கொண்ட கதையாகும். இராமு கொழும்பில் ஒரு சேரிப்பகுதி அறையில் தங்கியிருக்கும் இளைஞன். தோட்டத்தில் போராடியமைக்காகத் தகப்பன் பிணையின்றி ஜெயிலில் இருக்கப் பாட்டனார் பாரிசவாதத்தில் படுத்திருக்க இரு தங்கைகளும் தோட்டத்தில் பிழைப்பு நடத்த இவனும், தம்பி ராசுவும் அவ்வருடத் தேர்தலில் போட்டியிட்டவருக்குத் தோட்ட மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தந்து வெற்றியடைய வைக்கின்றனர். அவர் மந்திரியானவுடன் இவர்களைக் கணக்கு எடுக்காமலே போக, கொழும்புக்கு வந்து சீமெந்துப்பை ஒட்டிக் கொடுத்து சீட்டுக்காசு சேர்த்து உழைக்கிறான் இராமு. ரரசுவும் அவ்வாறே கொழும்பில் தன் உழைப்பைக் கொட்டுகிறான். தீபாவளிக்குத் தாத்தாவைப் பார்க்க வருமாறு அழைக்க, அதற்கான பொருட்களை இருவரும் வாங்கிச் சேர்க்கின்றனர். தங்கைக்காக தம்பி ஓடர் கொடுத்த நகை கிடைக்கத் தாமதமாக அதைப்பெற்று வர ராசு போன ஒரு சமயத்தில் கொலன்னாவ குண்டுவெடிப்பு நிகழ்ந்து, அதன் பின்னரான காடையரின் வெறியாட்டத்தில் இராமு தமிழன் என்ற காரணத்தினால் கொல்லப்படுகின்றான். அவனது உழைப்புச் சூறையாடப்படுகிறது. நாட்டில் தொடர்ந்த இனவாத யுத்தம் ஒரு மலையக இளைஞனின் வாழ்வை எவ்வாறு புரட்டிப் போடுகிறது என்பதை இக்கதை துலாம்பரமாக விளக்குகிறது.

இத்தொகுதியின் இறுதிக்கதை கும்பி லாம்பு. இக்கதையில் ராக்கன் தன் மனைவி அஞ்சலையை சவூதிக்கு அனுப்பி விடத் துடிக்கிறான். கசிப்புக் குடித்தே தன் வாழ்வைக் கரியாக்குபவன் அவன். அஞ்சலையோ தன் பிள்ளைகளைப் படிக்க வைத்து முன்னேற்றத் துடிப்பவள். வெளிநாடு போய் வந்து நல்ல நிலையிலுள்ள குடும்பங்களையும், வெளிநாட்டு அவலங்களால் திரும்பி வந்த பெண்களையும் ராக்கன் அறிவான். பாஸ்போட் எடுப்பதற்கான காலக் கெடுவன்று அஞ்சலை தன் விதியே என்று பாஸ்போட் எடுக்கத் தயாராகிறாள். அவ்வூருக்கு வரும் குறத்தி ஒருத்தி, உன் வீட்டில் ஒரு உயிர் போகப் போகிறது என ஆரூடம் சொன்னதைக் கேட்டு மனம் குழம்பிய ராக்கன் மறு நாள் மனம் மாறி இனிமேல் தான் கசிப்புக் குடிப்பதில்லை எனச் சத்தியம் செய்கிறான். நேர்மறை விளைவைத் தருவதாக அமைகின்ற இக்கதை வாசகனுக்கு நிறைவில் ஒரு ஆறுதலைத் தருவதாய் அமைந்துள்ளது. ஓட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால் இத் தொகுதியிலுள்ள சிறுகதைகளில் பெரும்பாலானவை அவலச்சுவை தரும் கதைகளாகவே உள்ளன. அவை அவ்வாறு அமைவதை உண்மையில் தவிர்க்கவும் முடியாது. மலையக மக்களின் பாடுகள் உண்மையில் அத்தகையவை. அவற்றை உணர்வு ரீதியாக விபரிப்பதன் மூலம் மலையகத்தோர் கண்ணீரைத் திசை தோறும் எடுத்துச் செல்கிறார் கதாசிரியர். கதாசிரியரின் எழுத்தில் அவருக்கு இயல்பாக அமையும் வட்டாரச் சொற்களும், உணர்வுபூர்வமான விபரிப்பும் கதைகளை வாசகனுக்கு நெருக்கமாக்குகின்றன. வரலாற்று ரீதியான பார்வையும், மன ஒழுங்கில் ஒழுகிச் செல்லும் நீண்ட வாக்கியங்களும், உணர்வுத் ததும்பல்களும், லேசான எள்ளல் நடையும் கதைகளுக்கு வலுச் சேர்க்கும் கூறுகளாக அமைகின்றன. அவ்வகையில் இத் தொகுதி மூலம் மலையக இலக்கியத்திற்குத் தனது காத்திரமான பங்களிப்பை மாத்தளை வடிவேலன் வழங்கியுள்ளார். என்பதைத் துணிந்து கூறலாம்.

இஸ்ரேல்

# மக்களுக்கு இஸ்ரேல் இராணுவம் எச்சரிக்கை

இஸ்ரேல் - ஹமாஸ் குழுவினர்களுக்கு இடையிலாக நடந்து வரும் போர் 5ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்நிலையில், காசா மீதான வான்வழித் தாக்குதலுடன் தரைவழி தாக்குதலையும் அதிகரிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. இஸ்ரேல் ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதலைத் தொடங்கியதில் இருந்து பல கொலைகள் நிகழ்ந்த காசா எல்லைப்பகுதிகளின் கட்டுப்பாட்டை மீட்டுவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அங்கு பல பகுதிகள் மற்றும் சாலைகளின் பாதுகாப்பை இஸ்ரேல் இராணுவம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதேபோல, அமெரிக்காவில் இருந்து அதிநவீன ஆயுதங்களுடன் வந்த முதல் விமானம் இஸ்ரேலின் நேவடிம் விமானநிலையத்தில் இறங்கியுள்ளதை அந்நாட்டு இராணுவம் உறுதி செய்தது.

இந்த ஆயுதங்கள் ஒருகுறிப்பிடத்தகுந்த தாக்குதல் மற்றும் கூடுதல் பலத்தினை உருவாக்க பயன்படுத்தப்படும் என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதனிடையே இஸ்ரேல் குண்டு வீச்சில் ஐ.நா. ஊழியர்கள் 9 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. இந்த சூழலில் இஸ்ரேலின் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இஸேரல் பிரதமர் நேதன்யாகு, எதிர்க்கட்சித்தலைவர் பென்னி இடையேயான பேச்சுவார்த்தைக்குப்பின் இந்த அறிவிப்பு வெளியானது. அவசர நிலை பிரகடனப்படுத்த ப்பட்டதைத்தொடர்ந்து போர் மேலாண்மை



அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், லெபனானில் இருந்து இஸ்ரேலிய வான்வெளிக்குள் ஊடுருவியதாக சந்தேகிக்கப்படும் தகவல்கள் கிடைத்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து வடக்கு நகரமான மாலோட்- தர்ஷிகாவில் வசிக்கும் பொதுமக்கள் வீட்டிலேயே இருக்குமாறும், கதவுகளைப் பூட்டிக்கொள்ளுமாறும், ஊடுருவல் சாத்தியம் குறித்து எச்சரிக்கும்படியும் இஸ்ரேலிய முகப்புக் கட்டளை தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. வடக்கு இஸ்ரேலின் சைரன் தொடர்ந்து ஒலி எழுப்பி வருகின்றன, உயிரிழப்புகள் பற்றிய உறுதியான அறிக்கைகள் எதுவும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேல்

## "ஹமாஸ் உறுப்பினர்களை முற்றாக அழிப்போம்"

இஸ்ரேக்கு எச்சரிக்கை விடுத்து ஹமாஸ் கமாண்டர் மஹ்மத் அல் ஜஹார் வீடியோ வெளியிட்ட நிலையில், அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுகையில், ஹமாசுக்கு எதிரான போராட்டத்தை தொடர்வதில் உறுதியாக இருக்கிறோம். ஹமாஸ் அமைப்பின் ஒவ்வொரு உறுப்பினரையும் நசுக்கி அழிப்போம் என்றார்.

மேலும், கடந்த சனிக்கிழமை ஹமாஸ் அமைப்பின் தாக்குதல் மற்றும் அட்டூழியங்களை பட்டியலிட்ட அவர், ஹமாஸ் அமைப்பை வேறோடு அறுக்க தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தியதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் இஸ்ரேலுக்கு உலக தலைவர்களிடம் இருந்து கிடைத்த ஆதரவையும் அவர் விவரித்துள்ளார்.

## உயிர் காக்கும் பொருட்களை அனுமதிக்க வேண்டும்: ஐ.நா



ஹமாஸ் படையினரை முழுமையாக ஒழிப்பதற்காக அவர்கள் வாழும் காசா பகுதிக்கு செல்லும் மின்சாரம், குடிநீர், உணவு உட்பட அனைத்து சேவைகளையும் இஸ்ரேல் தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்நிலையில், போர் விமானங்கள் மூலம் குண்டுகள் வீசுவதால் காசா மக்கள் நிலைகுலைந்து போய் உள்ளனர்.

உணவு, மருந்துக்கு திண்டாடும் நிலையில் உடைமைகளை இழந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறிடத் தொடங்கியுள்ளனர். தற்போதைய நிலைவரப்படி சுமார் 4 இலட்சம் பேர் காசாவில் இருந்து வெளியேறி இருப்பது தெரியவந்துள்ளது.


இந்நிலையில், இஸ்ரேலின் பதில் தாக்குதலால் காசா நகரம் இருளில் மூழ்கியுள்ளது. இஸ்ரேல் காசாவை முழுமையாக முற்றுகையிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 23 இலட்சம் பேர் வசிக்கும் காசாவில் உணவு, எரிபொருளை முழுமையாக இஸ்ரேல் நிறுத்தியது. ஒரேயொரு மின் நிலையம் இருந்த நிலையில் அங்கும் எரிபொருள் இல்லாததால் முடங்கியுள்ளது.

ஈரோடு

# அரிய வகையான சருகுமான்

உலகிலேயே மிகவும் சிறிய, அரிய வகை உயிரினமாக சருகுமான் கருதப்படுகிறது. இதன் எடை 700 கிராம் முதல் 8 கிலோ கிராம் அளவில் இருக்கும். மான் இனம் என்றாலும் இதற்கு கொம்புகள் கிடையாது. ஆனால், சிறிய வால் உண்டு. ஆண் சருகுமானுக்கு மட்டும் கோரைப்பற்கள், ஒரு ஜோடி தந்தம் போல நீண்டு காணப்படும்.

இதன் நிறம் பழுப்பாகவும், உடலின் மேற்புறம் மஞ்சள் தூவியது போலவும், அடிப்பகுதி வெண்மையாகவும் இருக்கும். மிகவும் அரிதான இந்த மான்



இந்தியாவின் மத்திய பிரதேசம், ஒடிசா, பீகார் மற்றும் இலங்கை நாடுகளில் அடர்ந்த காடுகளில் காணப்படும்.

இந்நிலையில், ஈரோடு மாவட்டம் சென்னிமலை அடுத்த மயிலாடி என்ற இடத்தில், பாம்பு பிடி வீரர் யுவராஜ், பாம்பை பிடித்து கொண்டு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். அப்போது வனப்பகுதியையொட்டி வீதியோரம் ஒரு விலங்கு ஓடுவதை பார்த்து அதை தூக்கி பார்த்துள்ளார். பார்க்க வித்தியாசமாக இருந்ததால் இது குறித்து உடனடியாக வனத்துறையினருக்கு அவர் தகவல் தெரிவித்த்துள்ளார். அதன்பேரில் வனத்துறையினர் விரைந்து வந்து அந்த விலங்கு பற்றி ஆராய்ந்தபோது அது அரிய வகை சருகுமான் என தெரிய வந்தது. இந்த மான் இந்த வனப்பகுதியில் எவ்வாறு வந்தது என வனத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.






## இந்தியர்களை மீட்டெடுக்க "ஆபரேஷன் அஜய்"

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் குழுவினருக்கும் இடையில், தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. இதனால், வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இஸ்ரேலில் மட்டும் இந்தியர்கள் 18,000 பேர் உள்ளனர். அவர்களை மீட்க இந்திய மத்திய அரசும், வெளியுறவு துறையும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்நிலையில், இஸ்ரேலில் உள்ள இந்தியர்களை மீட்கும் பணிகளை "ஆபரேஷன் அஜய்" மூலம் இந்தியா தொடங்கியுள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தனது எக்ஸ் தளத்தில், "சிக்கியுள்ள இந்தியர்களுக்காக சிறப்பு விமானங்கள் மற்றும் பிற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வெளிநாட்டில் உள்ள எங்கள் நாட்டினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு முழுமையாக அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.





## தேர்தல் திகதியை தள்ளிய முகூர்த்தம்

இந்தியாவின் ராஜஸ்தான், மத்திய பிரதேசம், தெலங்கானா உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு தேர்தல் திகதி அண்மையில் அறிவிக்கப்பட்டது. இதில், ராஜஸ்தானுக்கு நவம்பர் 23ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனிடையே, அன்றைய தினத்தில் ஏராளமான திருமணங்கள், பொது நிகழ்ச்சிகள், பண்டிகைகள் வருவதால், திகதியை மாற்றிவைக்க வேண்டும் என பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. இதனை ஏற்று, நவம்பர் 23ஆம் திகதிக்கு பதிலாக 25ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும் என தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மேலும், ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி டிசம்பர் 3ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணம்:

# ஆப்கானிஸ்தானை வீழ்த்திய இந்தியா





இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், டெல்லியில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற ஆப்கானிஸ்தான் உடனான போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 272/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி 80 (88), அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 62 (69) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 4/39, ஹர்டிக் பாண்டியா 2/43, ஷர்துல் தாக்கூர் 1/31, குல்தீப் யாதவ் 1/40)

இந்தியா: 273/2 (35 ஓவ. ) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 131 (84), விராட் கோலி ஆ.இ 55 (56) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரஷீட் கான் 2/57)

போட்டியின் நாயகன்: றோஹித் ஷர்மா

இந்நிலையில் சென்னையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷை நியூசிலாந்து எதிர்கொள்ளவுள்ளது.

ஸஹிரியன்ஸ் பூப்பந்தாட்டத் தொடரில்

## ஷட்டில் ஹன்டர் சம்பியன்

■ எம்.என்.எம். அப்ராஸ்





கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர் கட்டார் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஸஹிரியன்ஸ் பூப்பந்தாட்டத் தொடரில் ஷட்டில் ஹன்டர் அணி சம்பியனானது.

ஆண்கள் இரட்டையர் பூப்பந்தாட்டத் தொடராக இடம்பெற்ற இத்தொடரில் 16 அணிகள் பங்கேற்றிருந்த நிலையில், இறுதிப் போட்டியில் என்.எஸ் ஸ்மாஷஸ் டோகா அணியை வென்றே ஷட்டில் ஹன்டர் சம்பியனானது.

சிநேகபூர்வ மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடர்:

## மன்னார் மாவட்ட செயலகம் சம்பியன்

■ சுப்ரமணியம் பாஸ்கரன்



வட மாகாண மாவட்டச் செயலகங்களுக்கிடையிலான பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான சிநேகபூர்வ மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் மன்னார் மாவட்ட செயலகம் சம்பியனானது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை வென்றே மன்னார் சம்பியனானது.

இத்தொடரின் முதற்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தை மன்னார் வென்றதுடன், தொடர்ந்து வவுனியா மாவட்ட செயலகத்தை கிளிநொச்சி வென்று இறுதிப் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றது. மூன்றாவது போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை வென்று மன்னார் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அடுத்தாண்டுக்கான குறித்த தொடர் யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எல்லே போட்டியில்

## தேசிய மட்டத்துக்குத் தெரிவாகிய நுவரெலியா அணி

■ ஆ. ரமேஸ்.



நுவரெலியா மாவட்ட செயலக விளையாட்டுத் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 28 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கான மாவட்ட மட்ட எல்லேயில், நுவரெலியா அணி வெற்றிபெற்று, தேசிய மட்ட எல்லேக்குத் தெரிவாகியுள்ளது.

மாநகர சபை பொது மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெற்ற நோவூட் அணியுடனான இறுதிப் போட்டியில் இடைவிடாது பெய்த மழையையும் பொருட்படுத்தாது வீரர்கள் பங்குபற்றிருந்த நிலையில் 6-2 என்ற புள்ளிகள் கணக்கில் நுவரெலியா அணி வென்றது.

இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதற்கு

## இலங்கை கிரிக்கெட் அறக்கட்டளையால் உபகரணங்கள் அன்பளிப்பு

■ சிவாணி ஸ்ரீ





இலங்கை கிரிக்கெட் அறக்கட்டளை மூலம் இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் மற்றும் கிராமிய மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை பெற்று கொடுக்கும் திட்டத்தின் கீழ் கிரிக்கெட் உபகரணங்களை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு இலங்கை கிரிக்கெட் அறக்கட்டளையின் தலைவரான நவீன் திஸாநாயக்கவின் தலைமையில், கொழும்பில் உள்ள இலங்கை கிரிக்கெட் அறக்கட்டளையின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, நவீன் திஸாநாயக்கவினால் யாழ்ப்பாணம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் பதுரலிய கம்புராவல மத்திய மகா வித்தியாலயம் என்பவற்றுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 13 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.